

# கண்தான விழிப்புணர்வு பேரணி

புதுச்சேரி, ஆக.30–

மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை, கண் மருத்துவத்துறை சார்பில் தேசிய இருவார கண்தான விழா கொண்டாடப்பட்டது. இதனையொட்டி மருத்துவமனையில் கண்தான விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தை மருத்துவமனையின் துணை இயக்குனர் மற்றும் டீன் காக்னே கொடியசைத்து தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணைத்தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், மருத்துவமனையின் கண் மருத்துவத்துறை தலைமை மருத்துவர் நல்லமுத்து, பேராசிரியர் சுட்டப்பதாஸ், இணை பேராசிரியர்கள் ஸ்ரீபால், ரேணுகாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் மணக்குள விநாயகர் செவிலியர்கல்லூரி மருத்துவர்கள், பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். பேரணி கல்லூரி வளாகத்தில் தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது.


**மாலை மலர்**

போன்: 2203305

**வரி விளம்பரங்கள்**

மாலைமலரில் வரி விளம்பரம் செய்யுங்கள். குறைந்த செலவில் நிறைந்த பயன் பெறுங்கள்.

**புதுச்சேரி பதிப்புக்கு வரி 1–க்கு ரூ.45.00**

சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், நாகர்கோவில், ஈரோடு, புதுச்சேரி, தஞ்சாவூர், திண்டுக்கல், வேலூர், நெல்லை, கடலூர், தர்மபுரி ஆகிய 14 பதிப்புகளுக்கு சேர்த்து

**வரி 1–க்கு ரூ.360.00**

குறைந்த பட்சம் 4 வரிகள்
அதிக பட்சம் 20 வரிகள்



**காணவில்லை**

எனது 8–ம்வகுப்புமாற்றுசான்றிதழ் சேதராப்பட்டுசந்திப்பில்ஜெராக்ஸ் எடுக்க செல்லும் வழியில் தவறிவிட்டது. காண்போர் கீழ்க் கண்ட முகவரியில் தெரிவிக்க வும். B.அய்யனாரப்பன், த/பெ. பாலகிருஷ்ணன், பள்ளத்தெரு, கரசூர், புதுச்சேரி–605502.



TRUE COPY ATTESTED
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE AND HOSPITAL
MADAGADIPET, PUDUCHERRY-605 107.




# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் கண்தான விழிப்புணர்வு பேரணி

புதுச்சேரி, ஆக. 30-

தேசிய கண் தான இருவார விழா ஆண்டுதோறும் ஆகஸ்ட் 25 முதல் செப்டம்பர் 8 வரை அனுசரிக்கப்படுகிறது. கண்தானத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தைப்பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இவ்விழா கொண்டாடப்படுகிறது.

உலக அளவில் 135 மில்லியன் மக்கள் பார்வை இழந்தவர்களாக உள்ளனர். இந்தியாவில் மட்டும் 10 மில்லியன் மக்கள் பார்வை இழந்து இவ்வுலகைக் காண முடியாதவர்களாய் உள்ளனர். இதில் கருவிழி நோயால் பார்வை இழந்தவர்களின் எண்ணிக்கை 6.8 மில்லியன். இதில் குழந்தைகள் மட்டும் 7,80,000.

ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கண் மருத்துவத்துறை சார்பில் தேசிய இருவாரக் கண்தான விழா கொண்டாடப்பட்டது. இதனையொட்டி மருத்துவமனையில் கண்தான விழிப்புணர்வு கண்காட்சி வாரம் முழுவதும் நடத்தப்பட்டது. மருத்துவமனையின் நோயாளிகள் மற்றும் உடனிருப்போர் பயன்பெறும் விதமாக கண்காட்சி அமைக்கப்பட்டது. மேலும் ஒரு பகுதியாக தேசிய கண்தான இருவார விழா விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தை மருத்துவமனையின் துணை இயக்குனர் மற்றும் டீன். காக்னே கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், மருத்துவக்கண்காணிப்பாளர் பிரகாஷ், மருத்துவமனையின் கண் மருத்துவத்துறை தலைமை மருத்துவர் நல்லமுத்து, பேராசிரியர் சுட்டப்பதாஸ், இணை பேராசிரியர்கள் ஸ்ரீபால் மற்றும் ரேணுகாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தில் மணக்குள விநாயகர் செவிலியர் கல்லூரி முதல்வர் தனுசு, பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். மேலும் ஊர்வலத்தில் மருத்துவக்கல்லூரி மற்றும் செவிலியர் கல்லூரி மருத்துவர்கள், பேராசிரியர்கள், மாணவ -மாணவிகள் கலந்துக் கொண்டனர்.

கல்லூரி வளாகத் தில் தொடங்கிய பேரணி முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

## மணக்குள விநாயகர் கல்லூரி சார்பில்

# கண்தான விழிப்புணர்வு பேரணி



ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி சார்பில் நடந்த கண்தான விழிப்புணர்வு பேரணியை துணை இயக்குனர் காக்னே துவக்கி வைத்தார்.

புதுச்சேரி, ஆக. 30: புதுச்சேரி ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கண் மருத்துவத்துறை சார்பில் தேசிய இருவார கண்தான விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி, மருத்துவமனையில் கண்தான விழிப்புணர்வு கண்காட்சி வாரம் முழுவதும் நடத்தப்பட்டது. மேலும், தேசிய கண்தான இருவார விழா விழிப்புணர்வு ஊர்வலமும் நடந்தது. இதனை மருத்துவமனை துணை இயக்குனர் காக்னே துவக்கி வைத்தார். கல்லூரி வளாகத்தில் துவங்கிய இப்பேரணி முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது.

மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்எல்ஏ., செயலாளர் டாக்டர் நாராயணசாமி கேசவன், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் பிரகாஷ், மருத்துவமனை கண் மருத்துவத் துறை தலைமை மருத்துவர் நல்லமுத்து, பேராசிரியர் சுட்டப்பதாஸ், இணை பேராசிரியர்கள் ஸ்ரீபால், ரேணுகாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் மணக்குள விநாயகர் செவிலியர் கல்லூரி முதல்வர் தனுசு மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM
MADAGADIPET, PUDUCHERRY



# மதகடிப்பட்டில் தாய்ப்பால் விழிப்புணர்வு பேரணி


## அரசு அதிகாரி யஸ்வந்தையா தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, ஆக. 3-
உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு புதுச்சேரி அருகே உள்ள மதகடிப்பட்டு மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் குழந்தைகள் நலத்துறை சார்பாக தாய்ப்பாலின் மகத்துவம் குறித்து விழிப் புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரி மாணவர்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களும் கலந்து கொண்டனர். புதுவை மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இயக்குனர் யஸ்வந்தையா கொடி அசைத்து விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார்.

பேரணியில் மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணைத்தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குனர் காக்னே, டீன். கார்த்திக்கேயன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை மருத்துவ கண்காணிப்பாளர் கிரிஜா ஆகியோர் பேசினர்.

பேரணி கல்லூரி வளாகத்தில் இருந்து தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக சென்று மதகடிப்பட்டு ரவுண்டானாவை ஊர்வலம் அடைந்தது. அங்கு பொது மக்கள் மத்தியில் குழந்தை நலத்துறை தலைவர் அருள்குமரன், பேராசிரியர் சிங்காரவேலு மற்றும் தாய்ப்பால் ஊக்குவிப்போர் கூட்டமைப்பு நடுவன் ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு கிளை சாம்பசிவம் தாய்ப்பால் மகத்துவம் குறித்தும், இவ்வருட மையக்கருத்தினை பற்றியும் பொதுமக்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். இப்பேரணியில் குழந்தைகள் நலத்துறை இணை மற்றும் உதவி பேராசிரியர், மருத்துவ முதுநிலை மற்றும் இளநிலை மாணவர்கள் மற்றும் செவிலியர் கல்லூரி மாணவர்கள் 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM
MADAGADIPET, PUDUCHERRY-605 107.



மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில்

# உலக தாய்ப்பால் வார விழா

புதுச்சேரி, ஆக. 3–

உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் குழந்தைகள் நலத்துறை சார்பில் தாய்ப்பாலின் மகத்துவம் குறித்து விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியில் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி, செவிலியர் கல்லூரி மாணவர்கள் மற்றும் நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். புதுவை மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இயக்குனர் யஷ்வந்தையா கொடி அசைத்து விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார்.

இப்பேரணியில் மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் டாக்டர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குனர் காக்னே, கார்த்திகேயன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை மருத்துவ கண்காணிப்பாளர் கிரிஜா ஆகியோர் பங்கேற்று பேசினர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

## மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி சார்பில்

# தாய்ப்பால் விழிப்புணர்வு பேரணி



மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி சார்பில் நடந்த தாய்ப்பாலின் மகத்துவம் குறித்த விழிப்புணர்வு பேரணியை மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இயக்குநர் யஸ்வந்தையா துவக்கி வைத்தார்.

புதுச்சேரி, ஆக. 6: உலக தாய்ப்பால் வாரவிழாவை முன்னிட்டு புதுச்சேரி ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் குழந்தைகள் நலத்துறை சார்பில் தாய்ப்பாலின் மகத்துவம் குறித்து விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதில் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி, செவிலியர் கல்லூரி மாணவர்கள் மற்றும் என்எஸ்எஸ் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

புதுவை அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இயக்குனர் யஸ்வந்தையா கொடியசைத்து துவக்கி வைத்தார். பேரணியில் மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்எல்ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குனர் காக்னே, டீன் கார்த்திகேயன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை மருத்துவ கண்காணிப்பாளர் கிரிஜா ஆகியோர் பேசினர்.

கல்லூரி வளாகத்தில் இருந்து புறப்பட்ட பேரணி, முக்கிய வீதிகள் வழியாக சென்று மதகடிப்பட்டு ரவுண்டானாவை சென்றடைந்தது. பின்னர் அங்கு பொதுமக்கள் மத்தியில் குழந்தைகள் நலத்துறை தலைவர் அருள்குமரன், பேராசிரியர் சிங்காரவேலு, தாய்ப்பால் ஊக்குவிப்போர் கூட்டமைப்பு நடுவண் ஒருங்கிணைப்பாளர் (தமிழ்நாடு கிளை) சாம்பசிவம் ஆகியோர் தாய்ப்பாலின் மகத்துவம் குறித்து எடுத்துரைத்தனர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605

# உலக தாய்ப்பால் வார விழா பேரணி



பேரணியைத் தொடக்கிவைத்த புதுவை மகளிர் – குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இயக்குநர் எஸ்.யஸ்வந்தையா.

**புதுச்சேரி, ஆக. 5:** உலக தாய்ப்பால் வார விழாவையொட்டி, புதுச்சேரி ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் குழந்தைகள் நலத் துறை சார்பில், விழிப்புணர்வுப் பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

பேரணியில் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி, செவிலியர் கல்லூரி மாணவர்கள் மற்றும் நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

புதுவை மகளிர் - குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இயக்குநர் எஸ். யஸ்வந்தையா கொடியசைத்து விழிப்புணர்வுப் பேரணியைத் தொடக்கி வைத்தார்.

இந்தப் பேரணியில் பங்கேற்ற ஸ்ரீ மணக்குள விநாயகர் கல்வி நிறுவனர் தலைவர் எம். தனசேகரன், துணைத் தலைவர் எஸ். வி. சுகுமாறன், செயலர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குநர் காக்னே, புல முதன்மையர் கார்த்திக்கேயன், மருத்துவக் கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை மருத்துவக் கண்காணிப்பாளர் கிரிஜா ஆகியோர் பேசினர்.

கல்லூரி வளாகத்தில் இருந்து தொடங்கி பேரணி, முக்கிய வீதிகள் வழியாகச் சென்று மதகடிப்பட்டு ரவுண்டாவில் நிறைவடைந்தது.

அங்கு, பொதுமக்கள் மத்தியில் குழந்தைகள் நலத் தறைத் தலைவர் அருள்குமரன், பேராசிரியர் சிங்காரவேலு, தாய்பால் ஊக்குவிப்போர் கூட்டமைப்பின் நடுவண் ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு கிளையைச் சேர்ந்த சாம்பசிவம் ஆகியோர் தாய்பாலின் மகத்துவம் குறித்தும், இந்த ஆண்டுக்கான மையக் கருத்து பற்றியும் பொதுமக்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தனர்.

பேரணியில் குழந்தைகள் நலத் துறை இணை மற்றும் உதவிப் பேரசிரியர், மருத்துவ முதுநிலை மற்றும் இளநிலை மாணவர்கள், செவிலியர் கல்லூரி மாணவர்கள் உள்பட 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.


TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHAL KUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

புதுச்சேரி, நவ. 21–

போக்குவரத்து விதி களை மீறுபவர்களுக்கு போக்குவரத்து போலீசார் மட்டுமின்றி அந்தந்த போலீஸ் நிலைய சப்–இன்ஸ்பெக்டர்களும் வழக்கு பதிவு செய்து உடனடி அபராதம் (ஸ்பார்ட் பைன்) விதிக்கலாம் என்று கவர்னர் கிரண்பேடி உத்தரவிட்டு இருந்தார்.

அதன்படி போக்குவரத்து விதிகளை மீறுவோர் மீது அந்தந்த போலீஸ் நிலையங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டு வருகிறது. மேட்டுப்பாளையம் போலீஸ் நிலையத்தில் 86 வழக்குகளும், ரெட்டியார்பாளையத்தில் 21, கோரிமேடு 45, பெரியகடை 80, முத்தியால்பேட்டை 55, உருளையன்பேட்டை 59, முதலியார்பேட்டை 32 உள்பட புதுவை முழுவதும் உள்ள போலீஸ் நிலையங்களில் மொத்தம் 700 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.




## மணக்குள விநாயகர் கல்லூரியில்

# குழந்தைகள் பராமரிப்பு வாரவிழா


புதுச்சேரி, நவ. 21–

புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் குழந்தைகள் நலத்துறை சார்பில் தேசிய பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவை முன்னிட்டு பச்சிளம் குழந்தைகள் மற்றும் குறைமாத குழந்தைகளின் பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு

ராஜகோவிந்தன் திறந்து வைத்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக. மணக்குள விநாயகர் கல்விக்குழும தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மேலும் குழந்தைகள் நலத்துறை

பங்கேற்றார். மற்றும் விழாவை முன்னிட்டு பிரசவித்த தாய்மார்களுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் கேள்வி– பதில் போட்டி, செவிலியர்களுக்கு வினாடி–வினா நிகழ்ச்சிகளும்




# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு வாரவிழா

புதுச்சேரி, நவ. 22-

புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் குழந்தைநலத்துறை சார்பாக தேசிய பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு வராவிழா கடந்த ஒரு வராமாக வெகு விமர்சையாக கொண்டப்பட்டு வருகிறது. இவ்விழாவினை முன்னிட்டு பச்சிளம் குழந்தைகள் மற்றும் குறைமாத குழந்தைகளின் பராமரிப்பு குறித்து விழிப்புணர்வு கண்காட்சி தாய்மார்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் இயக்குநர் ராஜகோவிந்தன் பொதுமக்களின் பார்வைக்கு திறந்து வைத்தார். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீ மணக்குள விநாயகர் கல்வி குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் மரு. நாராயணசாமி கேசவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

குழந்தைநலத்துறை தலைவர் அருள்குமரன் பங்கேற்றார் மற்றும் இவ்விழாவினை முன்னிட்டு பிரசவித்த தாய்மார்களுக்கும் கருவுற்ற தாய்மார்களுக்கும் கேள்வி பதில் போட்டி. செவிலியர்களுக்கு வினாடி-வினா நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

திருச்சி செந்தில்குமார், KAP விஸ்வநாதன். மருத்துவ கல்லூரியில் பணிபுரியும் பச்சிளம் குழந்தை சிறப்பு மருத்துவர் பச்சிளம் குழந்தைகளின் ஆரம்பகால அபாய அறிகுறிகள் குறித்து விளக்கமாக பேசினார்.

இவ்விழாவில் மருத்துவக் கல்லூரி பேராசிரியர் சிங்காராவேலு மற்றும் பேராசிரியா குப்புசாமி பங்கேற்றனர்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHAL KUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரியில்

# தேசிய பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு வார விழா




▶ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரியில் நடந்த தேசிய பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு வார விழாவில் டாக்டர் செந்தில்குமாருக்கு துறை தலைவர் அருள்குமரன் நினைவு பரிசு வழங்கினார்.

**புதுச்சேரி, நவ. 21:** புதுவை ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் குழந்தைகள் நலத் துறை சார்பில் தேசிய பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு வார விழா கடந்த ஒரு வாரமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு பச்சிளம் குழந்தைகள் மற்றும் குறை மாத குழந்தைகளின் பராமரிப்பு குறித்து விழிப்புணர்வு கண்காட்சி தாய்மார்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. இதனை இயக்குநர் ராஜகோவிந்தன் திறந்து வைத்தார். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மணக்குள விநாயகர் கல்விக் குழும தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்எல்ஏ., செயலாளர் டாக்டர் நாராயணசாமி கேசவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

குழந்தைகள் நலத் துறை தலைவர் அருள்குமரன் பங்கேற்றார். விழாவை முன்னிட்டு பிரசவித்த தாய்மார்களுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் கேள்வி பதில் போட்டி, செவிலியர்களுக்கு வினாடி வினா நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. டாக்டர் செந்தில்குமார் பச்சிளம் குழந்தைகளின் ஆரம்பகால அபாய அறிகுறிகள் குறித்து விளக்கினர். மருத்துவக் கல்லூரி பேராசிரியர் சிங்காரவேலு, பேராசிரியர் குப்புசாமி ஆகியோரும் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM
MADAGADIPET, PUDUCHERRY





## மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில்

# தென்னிந்திய மருத்துவ மாநாடு

புதுச்சேரி, ஜூன். 24-

புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தேசிய அளவிலான 10-வது தென்னிந்திய மருத்துவ மாநாடு 'சிம்ஸ்கான்-2018' என்ற பெயரில் நடந்தது. மராட்டிய மாநிலத்தில் உள்ள மகாத்மா காந்தி மருத்துவ அறிவியல் நிறுவனம் மற்றும் மருத்துவமனையின் கண்காணிப்பாளர் டாக்டர் கலாத்ரி தலைமை தாங்கி மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். மாணவர் கவுன்சில் தலைவர் இளம்பாரதி வரவேற்றார். மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குனர் காக்னே மற்றும் பலர் கலந்து கொண்டு பேசினர். மாநாட்டில் கலந்து கொண்ட இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்கள் 147 ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். அவர்களுக்கும், மாநாட்டில் நடந்த வினாடி-வினா போட்டியில் முதல் 2 இடங்களை பிடித்தவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. 2 நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் புதுவை, தமிழகம், கர்நாடகா, கேரளா, ஆந்திரா, மாநிலங்களை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் பங்கேற்றனர்.

TRUE COPY ATTESTED
DEAN
KALITHEERTHALKUPPAM,
PUDUCHERRY-605 107.

மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில்

# தேசிய அளவிலான மருத்துவர்கள் மாநாடு



▶ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரியில் நடந்த தேசிய அளவிலான மருத்துவர்கள் மாநாட்டில் கல்லூரி நிறுவன தலைவர் தனசேகரன் பேசினார்.

**புதுச்சேரி, ஜூன் 24:** புதுச்சேரி ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தேசிய அளவிலான தென்இந்திய மருத்துவர்களின் 10வது மாநாடு 'சிம்ஸ்கான் 2018' என்ற பெயரில் நடைபெற்றது. மாணவர் கவுன்சில் தலைவர் இளம் பாரதி வரவேற்றார். மகாத்மா காந்தி மருத்துவ அறிவியல் நிறுவன (மகாராஷ்டிரா) மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் கலாந்திரி மாநாட்டை துவக்கி வைத்தார்.

மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்எல்ஏ., செயலாளர் டாக்டர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குநர் காக்னே, டீன்கள் கார்த்திகையன் (அகாடமிக்), அமோல் டாங்க்ரே (ரிசர்ச்), மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு பேசினர்.

தொடர்ந்து நடந்த விஞ்ஞான ஆராய்ச்சி கருத்தரங்கில் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்கள் வாய்மொழி, போஸ்டர், இ-போஸ்டர் மூலமாக 147 ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகளுக்கும், வினாடி வினா போட்டியில் முதல் 2 இடங்களை பிடித்தவர்களுக்கும் காசோலை வழங்கப்பட்டது. 2 நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் புதுச்சேரி, தமிழகம், கர்நாடகா, ஆந்திரா, கேரளா மாநிலங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் பங்கேற்றனர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# Benefits of 'Upa yoga' highlighted

## Event held to mark International Day of Yoga

The National College of Education in Cuddalore celebrated International Day of Yoga recently. A yoga workshop was conducted for the staff, students and parents by volunteers from Isha Yoga Centre, Neyveli. R. Arjun Duraisamy, correspondent of the college presided over the event.

The participants played a few games before the event. 'Upa Yoga', which needs to be given only a few minutes every day, was the main course.

The benefits of Upa Yoga was demonstrated as yoga for health, peace, success, well being, joy, inner dimension and love. Students and parents actively participated in the event and shared their experiences.




M. Dhanasekaran, chairman and managing director of Sri Manakula Vinayagar Medical College and Hospital, speaking at the inauguration of the 10th South Indian Medical Students Conference in Puducherry.

### 150 papers presented at conference

The 10th edition of South Indian Medical Students Conference (SIMSCON) was held at the Sri Manakula Vinayagar Medical College and Hospital here recently. Ilamparuthi, chairman of the students council, welcomed the gathering. Dr. S.P. Kalantri, Medical Superintendent of Mahatma Gandhi Institute of Medical Sciences, Maharashtra, inaugurated the programme and delivered the special address. M. Dhanasekaran, chairman and managing director of Sri Manakula Vinayagar group of educational institutions presided over the event. S.V. Sugumaran, vice-chairman, Dr. Narayanaswamy Kesavan, secretary of Sri Manakula Vinayagar group of educational institutions and Dr. R.N. Kagne, dean, academics, were present. Nearly 150 papers were submitted by the students during the medical conference.


### Student bags second prize in TT tourney

Priyadharshini, a third-year B.Tech (Information Technology) student of IFET College of Engineering, has bagged the second prize in the district-level Table Tennis tournament conducted by Spinners Table Tennis Academy for students from colleges in Villupuram district. K.V. Raja, college chairman, A. Mohamed Ilyas, vice-chairman, K. Shivram Alva, secretary, G. Mahendran, principal and S. Matilda, dean, academics felicitated the student.

### Student exchange programme

Anubharathi Ravindran, Arundhati Mohanty, Estella Francis and J.S. Anandhu Krishna from the School of Humanities, Pondicherry University have been selected to pursue their chosen courses of study in Translation and Interpretation as well as Economics at the Université Lumière Lyon 2 in France for the academic year 2018-19 as part of the student exchange programme between the two institutions.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.



# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் மருத்துவர் மாநாடு

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107

புதுச்சேரி, ஜூன். 24-
புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரிமற்றும் மருத்துவமனையில் தென்

10-வது மாநாடு சிம்ங்கான்-2018 என்ற பெயரில் நடைபெற்றது. இவ்விழாவில் மாணவர் கவுன்சில் தலைவர் இளம்பாரதி

மகாராஷ்டிரா மகாத்மாக காந்திமருத்துவ அறிவியல் நிறுவன மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர்

மாநாட்டை தொடங்கி வைத்தார்.

மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணைத்தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குனர் காக்னே, டீன் அகாடமி கார்த்தியேயன், டீன் ரிசர்ச் அமோல் டாங்க்ரோ, மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு பேசினார். தொடர்ந்து நடந்த விஞ்ஞான ஆராய்ச்சி கருத்தரங்கில், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்கள் வாய்மொழி, போஸ்டர், இ. போஸ்டர் மூலமாக 147 ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகளுக்கும், வினாடி, வினா போட்டியில் முதல் இடங்களை பிடித்து குழுக்களுக்கும் காசோலை வழங்கப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் புதுச்சேரி, தமிழகம், கார்நாடகா, ஆந்திரா, கேரளா மாநிலங்களை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மருத்துவ



## மணக்குளவிநாயகர் மருத்துவ கல்லூரி

# பேராசிரியருக்கு ராஜராஜன்சோழன்விருது

புதுச்சேரி, நவ.4—

மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை குழந்தைகள் நலத்துறை பேராசிரியருமான டாக்டர். சிங்காரவேலு. இவருக்கு தஞ்சாவூர்1033 சதய திருவிழாவை யொட்டி தஞ்சையை சேர்ந்த பிரபல குழந்தைகள் நல மருத்துவர் "மாமன்னன் ராஜராஜன்சோழன்" விருதை மாவட்ட கலெக்டர் அண்ணாதுரை, போலீஸ் சூப்பிரண்டு செந்தில்குமார், தஞ்சாவூர் எம்.பி. பரசுராமன் ஆகியோர் வழங்கினர். விருது பெற்ற பேராசிரியர் சிங்காரவேலுவை ஸ்ரீமணக்குளவிநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணைத்தலைவர் சுகுமாறன எம.எல.ஏ., செயலாளா நாராயணசாமிகேசவன் மற்றும் டாக்டர்கள், பணியாளர்கள் பாராட்டினர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

நமதுமுரசு புதுச்சேரி 4.11.2018



### தஞ்சையில் நடந்த விழாவில்

# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி டாக்டருக்கு மாமன்னன் ராஜராஜன் சோழன் விருது

## கலெக்டர், எம்.பி. வழங்கினர்

புதுச்சேரி, நவ. 4-
புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை குழந்தைகள் நலத்துறை பேராசிரியரும் மருத்துவருமான சிங்கார வேலுக்கு தஞ்சாவூர் 1033 சதய திருவிழாவை முன்னிட்டு தஞ்சையை சேர்ந்த பிரபல குழந்தைகள் நல மருத்துவர் "மாமன்னன் ராஜராஜன் சோழன்" விருது மாவட்ட ஆட்சியர் அண்ணா துரை, காவல் கண்காணிப்பாளர் செந்தில்குமார், தஞ்சா வூர் பாராளுமன்ற உறுப்பினர் பரசுராமன் ஆகியோரால் வழங்கப்பட்டது. இந்த விருதா னது வருடா வருடம் ஒவ்வொரு வருக்கும், அவர்கள் செய்த பலவிதமான சமூக பணி களைக் கருத்தில்கொண்டு தமிழக அரசால் தேர்ந்தெடுக் கப்பட்டு விருது வழங்கப் படுகிறது.

இவ்விருது பெற்ற ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்து வக்கல்லூரி மற்றும் மருத்துவமனை குழந்தைகள் நலத்துறை பேராசிரியரும் மருத்துவருமான சிங்கார வேலுவை மணக்குள விநாய கர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாரா யணசாமி கேசவன், மருத்து வர்கள் மற்றும் பணியாளர்கள் பாராட்டுகளை தெரிவித்தனர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

... வாழ்த்துக்களை பெறத்தக்கது.




ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை பேராசிரியர் சிங்காரவேலுக்கு, மாமன்னன் ராஜராஜ சோழன் விருது வழங்கப்பட்டது.

# ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி பேராசிரியருக்கு ராஜராஜசோழன் விருது

புதுச்சேரி, நவ.7-

ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை குழந்தைகள் நலத்துறை பேராசிரியர் டாக்டர் சிங்காரவேலுக்கு தஞ்சாவூர் 1033 சதய திருவிழாவை முன்னிட்டு, மாமன்னன் ராஜராஜ சோழன் விருது வழங்கப்பட்டது. தஞ்சை மாவட்ட கலெக்டர் அண்ணாதுரை, காவல் கண்காணிப்பாளர் செந்தில்குமார், தஞ்சை பாராளுமன்ற உறுப்பினர் பரசுராமன் ஆகியோர் விருதினை வழங்கினர்.

மாமன்னன் ராஜராஜ சோழன் விருது ஆண்டுதோறும், ஒவ்வொருவருக்கும் அவர்கள் செய்த பல விதமான சமூக பணிகளை கருத்தில் கொண்டு தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இவ்விருது பெற்ற டாக்டர் சிங்காரவேலை, ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்எல்ஏ, செயலாளர் டாக்டர் நாராயணசாமி கேசவன் மற்றும் மருத்துவர்கள், பணியாளர்கள் பாராட்டினர்.

# நெய்வேலியில் நகை, பணம் கொள்ளை

நெய்வேலி, நவ.7-

நெய்வேலி ஆர்ச்கேட் கேஎஸ்கே நகர் விரிவாக்கம் ஆயிப்பேட்டை மெயின் ரோட்டில் வசித்து வருபவர் ஞானமூர்த்தி மகன் சத்தியராஜ் (35). இவர், நேற்று குடும்பத்தினருடன் சொந்த ஊரான கீழூருக்கு சென்றுள்ளார்.

மாலையில் திரும்பி வந்தபோது, வீட்டின் முன்பக்க கதவு பூட்டு உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

பீரோவில் இருந்த 2 பவுன் நகை, ரூ.30 ஆயிரம் ரொக்கப் பணம் கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் காசநோய் கருத்தரங்கம்

புதுச்சேரி, அக். 2-
புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மாநில அளவில் காசநோய் கருத்தரங்கம் நடைபெற்றது. ஆர்.என்.டி.சி.பி. துணைத்தலைவர் அனில் பூர்த்தி, எஸ்.டி.ஓ. கோவிந்தராஜ், புதுச்சேரி ஆர்.என்.டி.சி.பி., டபிள்யூ.எச்.ஓ. ஆலோசகர் டெல்பினா, எஸ்.டி.எப். துணைத்தலைவர் வெங்கடேஸ்வராபாபு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். கல்லூரி தலைவர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாரன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கலந்து கொண்டனர். கல்லூரியின் இயக்குனர் ராஜகோவிந்தன், துணை இயக்குனர் காகனே, கல்லூரி டீன் கார்த்திகேயன் கலந்து கொணடனர்.

அனைத்து கல்லூரி மருத்துவர்கள், மருத்துவ மாணவர்களும் கலந்து கொண்டனர். சமுதாய மருத்துவத்துறை டாக்டர் அமல் டாங்கரே, மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆர்.என்.டி.சி.பி., எஸ்.டி.எப். தலைவர் சமுதாய மருத்துவத்துறை கலைச்செல்வன் ஏற்பாடுகளை செய்தார்.




TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

தினத்தந்தி




# கருத்தரங்கு

மதகடிப்பட்டு, அக்.4– புதுவை கலிதீர்த்தாள்குப்பத்தில் உள்ள மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், காசநோய் குறித்த கருத்தரங்கு நடந்தது. கல்லூரியின் தாளாளர் எம். தனசேகரன், துணை தாளாளர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக டாக்டர்கள் அனில் பூர்த்தி, கோவிந்தராஜ், டெல்பினா, வெங்கடேஸ்வரபாபு ஆகியோர் கலந்து கொண்டு காசநோய் குறித்து விளக்கி பேசினார்கள். கருத்தரங்கில் கல்லூரியின் இயக்குனர் டாக்டர் ராஜகோவிந்தன், துணை இயக்குனர் காகனே, கல்லூரி டீன் கார்த்திகேயன் மற்றும் பல்வேறு மருத்துவ கல்லூரி மருத்துவர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை சமுதாய மருத்துவதுறை டாக்டர்கள் அமுல் பாஸ்கரே, கலைச்செல்வன் ஆகியோர் செய்திருந்தனர்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் கருத்தரங்கம்



▶ மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரியில் மாநில அளவிலான டிபி கருத்தரங்கம் நடந்தது.


புதுச்சேரி, அக். 2: மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மாநில அளவிலான டிபி கருத்தரங்கு நடைபெற்றது. டாக்டர்கள் அனில்பூர்த்தி, கோவிந்தராஜ், டெல்பினா, வெங்கடேஸ்வர பாபு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். கல்லூரியின் தாளாளர் தனசேகரன், துணை தாளாளர் சுகுமாரன் எம்எல்ஏ, செயலாளர் நாராயணசாமி கேசவன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பு அழைப்பாளர்களை வரவேற்றனர்.

கல்லூரி இயக்குநர் ராஜகோவிந்தன், துணை இயக்குநர் காகனே, டீன் கார்த்திகேயன் மற்றும் அனைத்து கல்லூரி மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். கருத்தரங்குக்கான ஏற்பாடுகளை சமுதாய மருத்துவத்துறை டாக்டர்கள் அமுல் டாங்கரே, கலைச்செல்வன் ஆகியோர் செய்திருந்தனர்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

## நகரம்



மதகடிப்பட்டில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரியில் கவர்னர் கிரண்பேடி ஆய்வு செய்த காட்சி.

### தனியார் மருத்துவ கல்லூரிகளில்

# கவர்னர் கிரண்பேடி இன்று ஆய்வு

## மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகள் அமைக்க அறிவுறுத்தல்

திருபுவனை, ஆக. 19–

புதுவை கவர்னர் கிரண்பேடி வார இறுதி நாட்களில் தூய்மை பணி மற்றும் தனியார் தொழிற்சாலைகள் மற்றும் தனியார் மருத்துவ கல்லூரிகளில் நிலத்தடி நீர் பயன்பாடுகள் குறித்து ஆய்வு செய்து வருகிறார்.

**ஆய்வு**

அதுபோல் இன்று காலை கவர்னர் கிரண்பேடி மதகடிப்பட்டில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரிக்கு சென்று ஆய்வு செய்தார். அங்குள்ள கட்டிடங்களுக்கு சென்று மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது சில கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதி ஏற்படுத்தாதது குறித்து கல்லூரி நிர்வாகத்திடம் கவர்னர் கிரண்பேடி கேள்வி எழுப்பினார்.

**அவகாசம்**

அதற்கு கல்லூரி நிர்வாகத்தினர் மழைநீர் கட்டமைப்பு வசதி செய்ய 3 மாதம் அவகாசம் கேட்டனர். ஆனால், கவர்னர் கிரண்பேடி ஒரு மாதத்தில் மழைநீர் கட்டமைப்பு வசதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.


மேலும் மருத்துவ கல்லூரியில் நிலத்தடி நீர் எவ்வளவு பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்தும், அந்த நீர் எவ்வாறு வெளியேற்றப்படுகிறது என்பது குறித்தும் கேள்வி எழுப்பினார்.

அதற்கு கல்லூரிநிர்வாகத்தினர் குறிப்பிட்ட அளவு நிலத்தடி நீர் மட்டுமே பயன்படுத்தப்படுவதாகவும், பின்னர் அந்த கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு கல்லூரி வளாகத்தில் உள்ள செடி– கொடிகள் மற்றும் மரங்களுக்கு பயன்படுத்தப்படுவதாக தெரிவித்தனர். அதற்கு கவர்னர் கிரண்பேடி கல்லூரி நிர்வாகத்துக்கு பாராட்டு தெரிவித்தார்.

கவர்னரின் இந்த ஆய்வின் போது மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் சீத்தாராமன் உடன் இருந்தார்.

இதனைத்தொடர்ந்து கவர்னர் கிரண்பேடி அரியூரில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரிக்குசென்று ஆய்வு மேற்கொண்டார். அங்கும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கல்லூரி நிர்வாகத்திடம் அறிவுறுத்தினார்.

TRUE COPY ATTESTED
DEAN




மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில்

# உலக தாய்ப்பால் வார நிறைவு விழா

புதுச்சேரி, ஆக. 9–

புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் குழந்தைகள் நலத்துறை சார்பில் தாய்ப்பால் வார விழாவையொட்டி திருபுவனை மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வளவனூர் கிராமத்தில் கருவுற்ற பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு தாய்ப்பால் பற்றிய விழிப்புணர்வு முகாமில் போலீஸ் இன்ஸ்பெக்டர் லட்சுமி கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார். தாய்ப்பால் பற்றி மக்களிடம் விழிப்புணர்வு பேரணி சிறப்பாக நடைபெற்றன. புதுவையில் உள்ள அனைத்து மருத்துவ கல்லூரி இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கும் வினாடி, வினா நிகழ்ச்சியும், செவிலியர் கல்லூரி செவிலிய மாணவர்களுக்கும் பேச்சு போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. ஆரோக்கிய குழந்தை போட்டி நடத்தி 3 குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

உலக தாய்ப்பால் வார நிறைவு விழாவுக்கு மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் டாக்டர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குனர் காக்னே, டீன் கார்த்திகேயன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை மருத்துவ கண்காணிப்பாளர் கிரிஜா ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# மணக்குள விநாயகர் கல்லூரியில் உலக தாய்ப்பால் வாரவிழா

புதுச்சேரி, ஆக. 8-

மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் குழந்தைகள் நலத்துறை சார்பில் உலக தாய்ப்பால் வார நிறைவு விழா நடந்தது.



■ உலக தாய்ப்பால் நிறைவு விழாவை, மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் தனசேகரன் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். அருகில் துணை இயக்குனர் காக்னே, டீன் கார்த்திக்கேயன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், குழந்தை நலத்துறை தலைவர் அருள்குமரன், பேராசிரியர் சிங்காரவேலு.

உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு, கலித்தீர்தாள்குப்பம் மணக்குள விநாயகர் மருத்துவமனை குழந்தைகள் நலத்துறை சார்பில், தாய்ப்பால் கொடுக்க கடைப்பிடிக்க வேண்டிய நிலைகள், தாய்ப்பால் கொடுப்பதினால் குழந்தைக்கும், தாய்க்கும் ஏற்படும் பலன்கள் குறித்து சிறு கண்காட்சி மூலம், கடந்த ஒரு வாரமாக மருத்துவமனைக்கு வரும் தாய்மார்களுக்கு துண்டு பிரசுரங்கள் கொடுக்கப்பட்டன.

பின்னர், திருபுவனை மற்றும் வளவனூார் கிராமத்தில் கருவுற்ற பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு தாய்ப்பால் பற்றி விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. தாய்மார்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. ஆரோக்கிய குழந்தை போட்டி நடத்தி, மூன்று குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நிறைவு விழாவில், குழந்தை நலத்துறை தலைவர் அருள்குமரன் வரவேற்றார்.

மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் தனசேகரன், துணைதுலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குனர் காக்னே, டீன் கார்த்திக்கேயன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை மருத்துவ கண்காணிப்பாளர் கிரிஜா ஆகியோர் வாழ்த்தி பேசினர். பேராசிரியர் சிங்காரவேலு சிறப்புரையாற்றினார்.

பேராசிரியர் பிரித்தி தொகுத்து வழங்கினார். பல்வேறு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. குழந்தைகள் நலத்துறை பேராசிரியர் குப்புசாமி நன்றி கூறினார்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107

தேர்தலை உடனடியாக நடத்திடவும் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறிஉள்ளார்.




மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி சார்பில்

## உலக மனநல தினவிழா

புதுச்சேரி, அக். 14–

மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் உள்ள மனநல துறை மற்றும் செவிலியர் கல்லூரி சார்பில் உலக மனநல தினத்தை மதகடிப்பட்டில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் கலைக்கல்லூரியில் கொண்டாடியது. விழா கலைக்கல்லூரியின் முதல்வர் பாபு தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார். இவ்விழாவில் மனநல துறை யின் தலைமை மருத்துவர் பேராசிரியர் குமார் சிறப்பு ரையாற்றினார்.

இவ்விழாவில் மாணவர்களின் மனநலம் சார்ந்த வினாக் களுக்கு துணைபேராசிரியர் டாக்டர் வெங்கட்ரங்கன் விடை யளித்தார். செவிலியர் கல்லூரி பேராசிரியர் தனுசு மனநலம் குறித்த பொம்மலாட்டம் மற்றும் நாடகம் நடத்தி னார். இந்த விழாவில் இணைபேராசிரியர் டாக்டர் அருண், மனநல நிபுணர் செல்வம், உளவியலாளர் அம்பிகா மற்றும் சமூகவியலாளர் ரமா கலந்து கொண்டனர்.

முடிவில் கலைக்கல்லூரியின் பேராசிரியை வத்சலா நன்றி கூறினார்.

ராமநாதபுரம்– சேதராப்பட்டில்

## மின்நுகர்வோர் குறைதீர்வு கூட்டம்

16–ந்தேதி நடக்கிறது

புதுச்சேரி, அக். 14–

புதுவை மின்துறை சார்பில் மின்நுகர்வோர் குறை தீர்ப்பு முகாம் ராமநாதபுரம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பிரிவு அலுவலகத்தில் வருகிற 16–ந் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி முதல் 12 மணிவரை நடைபெற உள்ளது.

இந்த முகாமில் மின் வினியோக அலுவலகத்துக்குட்பட்ட அனைத்து மின்நுகர்வோர்கள் தங்கள் மின் வினியோகம் சம்பந்தமான அனைத்து குறைகளையும் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

அதுபோல் சேதாப்பட்டு துணை மின் நிலையத்தில் மின்நுகர்வோர் குறை தீர்ப்பு முகாம் வருகிற 16–ந் தேதி பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது. எனவே, சேதராப்பட்டு பிரிவு அலுவலகத்துக்குட்பட்ட அனைத்து மின்நுகர்வோர்கள் தங்கள் மின் வினியோகம் சம்பந்தமான அனைத்து குறைகளையும் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம்.


இந்த தகவலை மின்துறை செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

## அடையாளம் தெரியாத முதியவர் பிணம்

புதுச்சேரி, அக். 14–



புதுவை கோரிமேடு அடுக்குமாடி குடியிருப்பு அருகே 70 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் பிணமாக கிடந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த கோரிமேடு போலீசார் பிணத்தை கைப்பற்றி அவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் கவர்னர் மாளிகை எந்த நிதி வசூலும் செய்யவில்லை.

புதுவையில் உள்ள ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் குறைந்தபட்சம் 6 முதல் 15 ஆண்டுகளாக தூர் வாரப்படவில்லை. நிதி தட்டுப்பாடு காரணமாக பிரதான பாசன கால்வாய், கிளை கால்வாய்களை பொதுப்பணித்துறையால்

... மூலமாக எந்தவித ப... பரிமாற்றமும் நடப்பதில்லை. கொடையாளர்கள், பணியை மேற்கொள்ளும் தன்னார்வ நிறுவனங்கள் இடையே மட்டுமே பண பரிமாற்றம் நடக்கிறது.

எவ்வித நிதி பரிமாற்ற மும் இல்லாமல் பொதுப் பணித்துறை நீர்நிலைகளை தூர்வாரும் பணியை மேற் கொண்டு வருகிது. சமுதாய பங்களிப்புடன் இதுவரை 25 பாசன கால்வாய்கள் சுமார்

கஞ்சா போதை

## பெண்ணிடம் பண பறித்து சென்ற வாலிப

புதுச்சேரி, அக். 14–

கஞ்சா போதையில் பெண்ணிடம் பணப்பையை பறித்து சென்ற வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

புதுவை அரியாங்குப்பம் ஆர்.கே. நகர் மாஞ்சாலை ரோடு பகுதியை சேர்ந்தவர் அருள்பிரகாசம். இவரது மனைவி கலைவாணி (வயது 40).

இவர் புதுவை புஸ்சி வீதியில் உள்ள தனியார் ரெஸ்டாரெண்ட் ஓட்டலில் துப்புரவு ஊழியராக பணி செய்து வருகிறார். இவர் தினமும் சைக்கிளில் வேலைக்கு சென்று திரும்பு வது வழக்கம்.

பணப்பை பறிப்பு

அதுபோல் கடந்த 7–ந் தேதி மாலை வேலை முடிந்து சம்பள பணம் ரூ.10 ஆயிரத்தை வாங்கி லெதர் பேக்கில் வைத்து அதனை சைக்கிளின் முன் பக்க கூடையில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்.

நைனார் மண்டபத்தில் வந்த போது, பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபர் திடீரென கலைவாணியை வழிமறித்து சைக்கிள் கூடையில் இருந்த பணப்பையை பறித்து கொண்டு மின்னல் வேகத்தில் தப்பி சென்று விட்டார்.

அந்த பையில் ரொக்க பணம் ரூ.10 ஆயிரத்துடன் தனது செல்போன், ஏ.டி.எம். கார்டு உள்ளிட்டவற்றையும் கலைவாணி வைத்திருந்தார்.

இதுகுறித்து கலைவாணி முதலியார் பேட்டை போலீசில் புகார் செய்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் பாபுஜி, சப்–இன்ஸ்பெக்டர் ராஜன் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

பணப்பையை பறித்து சென்ற இடத்தில் பொறுத்தி இருந்த சி.சி.டி. கேமராவை ஆய்வு செய்த போது பணப்பையை பறித்தவரின் மோட்டார் சைக்கிள் பதிவு எண்ணை கண்டுபிடித்தனர்.

இதன் மூலம் விசாரணை நடத்தியதில் அந்த மோட் டார் சைக்கிள் புதுவை சண்முகாபுரத்தை அடுத்த சொக்கநாதன் பேட்டையை சேர்ந்த ஈஸ்வரன் என்ற மவுலி (20) என்பவருக்கு சொந்தமானது தெரிய வந்தது. இதையடுத்து மவுலியை



திருபுவனைபால

## ரூ.1½ லட்சம் செலவில்

கோபிகா எம்.எல்.ஏ. பண

திருபுவனை தொகுதிக்குட்ப... சேர்ந்த பெருமாள் நகர், பால... பற்றாக்குறை இருப்பதாக ... எம்.எல்.ஏ.விடம் புகார் தெரிவி...


இதையடுத்து மண்ணாடிப்... உதவியுடன் சட்டமன்ற உறுப்பின... லட்சம் செலவில் புதிய பைப் ... இதற்கான பணியை கோபிகா... தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியி... பஞ்சாயத்து ஆணையர் சீத்த... நாகராஜன், இளநிலை பொறிய... காங்கிரஸ் பரமுகர்கள், ஊர் ெ...

# Puducherry doctor addresses ERS meet

## It was attended by 20,000 experts

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

S. Yuvarajan, associate professor, Department of Pulmonary Medicine, Sri Manakula Vinayagar Medical College and Research, was among the guest speakers at a recent international conference held by the European Respiratory Society (ERS) at Versaillede, Paris.



S. Yuvarajan

Dr. Yuvarajan spoke on "Interstitial Lung Disease (ILD)" in one of the special sessions of the clinical grand rounds. He was one of the few Indian Pulmonologists who was invited as a speaker for the conference, which was attended by an estimated 20,000 pulmonologists from throughout the world.

Dr. Yuvarajan held discussions with experts from different countries and shared with them suggestions, novel interventional methods and new concepts in the treatment and management of challenging lung diseases from his experience. According to a press note from the medical college, the ERS conducts this international conference every year in different countries.

The ERS committee appreciated Praveen R., assistant professor, for his contributions to the session.

Dr. Yuvarajan was felicitated by Mr. M.Dhanasakaran, chairman and managing director, Sri Manakula Vinayagar Group of Institution; S.V. Sugumaran, vice-chairman, Dr. Narayanasamy Kesavan, Secretary; D. Rajagovindan, Director; R.N. Kagne, Deputy Director and Dean, doctors of different departments and staffs.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

9345456056.


## ஐரோப்பிய நுரையீரல் மகாசபையில் பங்கேற்று திரும்பிய

# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி பேராசிரியருக்கு குவியும் பாராட்டுகள்

புதுச்சேரி, அக். 7-

பாரிஸ் செப்டம்பர் 18 ஐரோப்பிய நுரையீரல் மருத்துவ கழகத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான சர்வதேச கருத்தரங்கம் "வெர்சைல் தெ பாரிஸ்" என்னும் இடத்தில் பிரமாண்டமாக நடந்தேறியது. இதில் உலகெங்கும் இருந்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நுரையீரல் மருத்துவர்கள் பங்கேற்றனர்.

சர்வதேச நுரையீரல் கருத்தரங்கம் ஒவ்வொரு ஆண்டும் ஐரோப்பிய நுரையீரல் கழகத்தால் சர்வதேச மகாசபை ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதில் உலகின் தலை சிறந்த நுரையீரல் மருத்துவர்கள் கலந்து கொண்டு முக்கிய தலைப்புகளில் நுரையீரல் நோய் மற்றும் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து உரையாற்றுவர். இந்த ஆண்டுக்கான கருத்தரங்கம் பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் நடைபெற்றது. இதில் புதுவையை சேர்ந்த புகழ்பெற்ற நுரையீரல்



மருத்துவர் யுவராஜன் கலந்து கொண்டு நுரையீரல் திசு பாதிப்பு குறித்து பேருரை ஆற்றினார். அவரது இந்த உரை சர்வதேச மகாசபையில் மிகுந்த வரவேற்பை பெற்றது. இது ஆசிய அளவில் வெகு சிலருக்கே கிடைக்கும் அறிய வாய்ப்பாக கருதப்படுகிறது. மேலும் அவர் அங்கு நடைபெற்ற கருத்துரையாடலிலும் பங்குபெற்று முக்கிய ஆலோசனைகளை வழங்கினார். இவர் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இணை பேராசியராக பணியாற்றி வருகிறார். மேலும் அதே துறையில் பணிபுரியும் மருத்துவர் பிரவீன் துணை பேராசிரியரின் பங்களிப்பிற்காகவும் கருத்தரங்களில் பாராட்டி நன்றி தெரிவிக்கப் பட்டது.

இந்நிலையில் சர்வதேச நுரையீரல் கருத்தரங்கில் பங்கேற்று நாடு திரும்பிய மருத்துவர் யுவராஜன், இணை பேராசிரியர் மருத்துவர் பிரவீன் ,துணை பேராசிரியர் அவர்களுக்கு ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன், செயலாளர் நாராயணசாமி கேசவன் மருத்துவ கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தன், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# மணக்குள விநாயகர் கல்லூரி பேராசிரியர் சர்வதேச நுரையீரல் கருத்தரங்கில் பங்கேற்பு

புதுச்சேரி, அக்.5-
ஐரோப்பிய நுரையீரல் மருத்துவ கழகத்தின் 2018 ம் ஆண்டுக்கான சர்வதேச கருத்தரங்கம் பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் நடைபெற்றது. உலகெங்கும் இருந்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுரையீரல் மருத்துவர்கள் பங்கேற்றனர்.

இதில் புதுவையை சேர்ந்த புகழ் பெற்ற நுரையீரல் மருத்துவர் யுவராஜன் கலந்து கொண்டு நுரையீரல் திசு பாதிப்பு குறித்து பேருரை ஆற்றினார். அவரது இந்த உரை சர்வதேச மகாசபையில் மிகுந்த வரவேற்பை பெற்றது. மேலும் அவர், அங்கு நடைபெற்ற கருத்துரையாடலிலும் பங்கு பெற்று முக்கிய ஆலோசனைகளை வழங்கினார்.

இவர் ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறார். மேலும் அதே துறையில் பணி புரியும் துணை பேராசிரியர் டாக்டர் பிரவீன் பங்களிப்பிற்காகவும் கருத்தரங்கில் பாராட்டி நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்த கருத்தரங்கில் பங்கேற்று நாடு திரும்பிய இணை பேராசிரியர் டாக்டர் யுவராஜன், துணை பேராசிரியர் டாக்டர் பிரவீன் ஆகியோரை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை குழுமத்தின் தலைவர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்எல்ஏ, செயலாளர் நாராயணசாமி கேசவன், மருத்துவ கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தன், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் பாராட்டினர்.

TRUE COPY ATTESTED
SRI MANAKULA VINAYAGAR MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM
MADAGADIPET, PUDUCHERRY-605 107



மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி சார்பில்

# மாணவ- மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுச்சேரி, ஆக. 5-

மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை சமூக மருத்துவதுறை சார்பில் உலக மக்கள் தொகை தினத்தையொட்டி 2018-க்கான 'குடும்ப கட்டுப்பாடு ஒரு தனி மனிதனின் சுதந்திரம்' என்ற தலைப்பில் மணக்குள விநாயகர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கல்லூரி மாணவ- மாணவிகளுக்கு விழிப்புணர்வு முகாம் 3 நாட்கள் நடைபெற்றது.

இந்த முகாமில் 150 மாணவ- மாணவிகள் பயனடைந்தனர். மணக்குள விநாயகர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கல்லூரியின் இணை பேராசிரியர் சரஸ்வதி, வெங்கடேஸ்வரா ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் துணை முதல்வர் விமலாதித்தியன் மற்றும் உதவி பேராசிரியை எழில்மலர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மருத்துவ கல்லூரி சமூக மருத்துவதுறை இணை பேராசிரியர் சுகுணா, துணை பேராசிரியர்கள் விநாயகமூர்த்தி, சிந்தூரி, பூமதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்

பயிற்சி மாணவிகள் நித்தியா, ரஞ்சிதா ஆகியோர் விளக்க உரை அளித்தனர். இந்நிகழ்ச்சியை சமூக சேவகி ஜெயந்தி ஒருங்கிணைத்தார்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.




# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் ஊடு கதிரியக்க துறை சார்பில் கருத்தரங்கம்

புதுச்சேரி, ஆக. 3-
புதுச்சேரியை சேர்ந்த மணக்குள விநாயகர் மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமனை ஊடு கதிரியக்க துறை சார்பில் சிறப்பு கருத்தரங்கம் நடந்தது. இந்த விழாவில் மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணைத்தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் மரு.நாராயணசாமி கேசவன் மற்றும் கல்லூரி துணை இயக்குனர் காக்னே, டீன் கார்த்திகேயன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், கதிரியக்கத்துறையின் புதுச்சேரி சேம்பர் தலைவர் நாகராஜன், செயலாளர் நடராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டு பேசினர்.

இன்டோவியியல் ரேடியாலஜி என்ற தலைப்பில் நூதன கருத்தரங்கம் புதுச்சேரி மாநிலத்தின் முதன் முறையாக நடந்தது. சென்னை சேர்ந்த அப்போலோ மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், தனியார் கல்லூரிகள், வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை ஆகிய கல்லூரிகளில் இருந்து பல சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வந்து உரையாற்றினர்.

சென்னை மற்றும் புதுச்சேரியை சேர்ந்த அனைத்து மருத்துவ கல்லூரியை சேர்ந்த ரேடியோ நோய் கண்டறிதல் மேற்படிப்பு மாணவர்கள் 150-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர்.

மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரியின் ரேடியோ நோய் கண்டறிதல் கதிரியக்கத்துறையின் பேராசிரியர் குலசேகரன், பாலச்சந்திரன் மற்றும் அனைத்து துறையை சேர்ந்தவர்கள் இந்த கருத்தரங்கம் நடத்த உறுதுணையாக இருந்தனர்.

TRUE COPY ATTESTED


DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# கண் சிகிச்சைக்கு புதிய கருவி இளம் டாக்டருக்கு பாராட்டு

**புதுச்சேரி, ஆக. 26–**

மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின், கண் மருத்துவ துறையைச் சார்ந்த டாக்டர் பிரித்திவி, துறை தலைவர் சுபாஷினி தலைமையின் கீழ், டி3 ரெட்கேம் என்ற கருவியை வடிவமைத்துள்ளார். இதன் மூலம் விழித்திரையினை புகைப்படம் மற்றும் காணொலி காட்சி எடுக்கலாம்.

இந்த கருவியானது பிளாஸ்டிக் சுத்திகரிப்பான் பாட்டில்களின் மீள் சுழற்சியில் செய்யப்பட்டதாகும். இதன் செய்முறை மற்றும் வடிவமைப்பு பற்றி இந்த கருத்தரங்கத்தில் விவரிக்கப்பட்டது. கருத்தரங்கத்தில் பங்குப்பெற்ற கண் மருத்துவர்கள் பாராட்டினர். இதற்கு முன்பு பயன்படுத்தப்பட்ட கண் விழித்திரையினை புகைப்படம் எடுக்க உதவும் கருவிகள் கடினமாகவும் ஒரே



டி3 ரெட்கேம் கருவி

இடத்தில் வைத்துப் பார்க்ககூடியவைகளாக இருக்கின்றன.

மேலும், அந்த கருவிகளில் காணொளி படம் எடுக்கவும், அவற்றை மற்றவர்களுக்கு உடனடியாக பகிர்ந்து கொள்ள முடியவில்லை என்பதால், இந்த புதுவிதமான மற்றும் எளிதில் செய்யக் கூடிய கருவியான டி3 ரெட்கேம் என்ற கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 800 மட்டும் செலவாகும். டி3 ரெட்கேம் என்பது பிளாஸ்டிக் சுத்திகரிப்பான் பாட்டில்களில் 20டி லென்சை அதனுள் பொருத்தி (விழித்திரையை பார்ப்பதற்காக கண் மருத்துவர்கள் பயன்படுத்தும் ஒடுக்கம் லென்ஸ்) பின்பு கைப்பேசியை அதனுடன் இணைத்து இந்த கருவி வடிவமைக்கப்படுகிறது. இந்த கைப்பேசியின் மூலம் புகைப்படம் மற்றும் காணொளி காட்சிகள் எடுத்து பிறருக்கு பகிர்ந்துக் கொள்ளவும், மாற்றங்கள் செய்யவும் இயலும்.



பிரித்திவி

இந்த புதுமையான கருவியானது நீரிழிவு நோயால் ஏற்படும் ரெடினோபதி மற்றும் க்ளாகோமா போன்ற நோய்களை ஆரம்பக்கட்டத்திலே கண்டறியவும், அதனால் ஏற்படும் பார்வை குறையினை போக்கவும் உதவும். தற்போது உள்ள சூழ்நிலையில், விழித்திரை பிரச்னை உள்ள நோயாளிகள் கண் மருத்துவரிடம் தாமதமான நிலையிலே சிகிச்சைக்கு வருகின்றனர்.

காரணம், நோய் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாததும், அனைத்து வசதிகளும் கொண்ட மேல் சிகிச்சை அளிக்கும் மருத்துவ வசதியில்லாததும்.

எனவே ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள ஊழியர்களுக்கு இந்த கருவி மிகவும் பயன் உள்ளதாய் இருக்கும். இதை கண்டுபிடித்த, முதுநிலை பட்டதாரி டாக்டர் பிரித்திவியை, மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன் ஆகியோர் பாராட்டினர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY

■ அறிவு, வீரம், நிதானம், நேர்மை ஆகிய நான்கும் நல்ல ஒழுக்கங்கள். — **பிளாட்டோ.**

மனதில் நினைத்துக் கொண்டான்.

''சீச்சீ… என்ன முட்டாள்தனமான யோசனை இது… அப்துல் குடிச்சிருக்கியா?'' என்றார், காத்தவராயன்.

''முதலாளி… பேச்சி மசாலா விளம்பரத்துல, ஓனரே நடிச்சிருக்கார்; பெரிய அரசியல் தலைவர் போல, மக்கள் கூட்டத்துக்கு தலைமை தாங்கி, பாட்டுக்கு வாய் அசைப்பார். மக்கள் ஏத்துக்கலையா… பவிதா ஜுவல்லரி விளம்பரத்துல, மொட்டைத் தலை ஓனர் நடிச்சிருக்கார்; மக்கள் ஏத்துக்கலையா…

''உங்க முகத்தை பவுர்ணமி போல, மாசு மருவில்லாம காட்ட, டிஜிட்டல் தொழில்நுட்பம் வந்திருச்சு… உங்க ஒரிஜினல் குரலுக்கு மாற்றா, 'டப்பிங்' குரல் வச்சிடலாம்… உங்களுக்கு ஜோடியா மூணு, 'ஹீரோயின்'கள போட்டுடலாம்… 'ரொமான்டிக்'கா, 20 நொடி, 40 நொடி, 60 நொடி விளம்பரங்கள் பண்ணிட்டா, 'சூப்பர் ஹிட்' ஆகிடும்!'' என, அளந்து விட்டான், அப்துல்.

''மூணு, 'ஹீரோயின்'கள் யார் யார்ன்னு நீயே சொல்லிடு!''

''மிரியா சாரியார், கோபிகா திடுகோனே, பேட்ரினா சைப்!''

''எனக்கு ஜோடியா நடிக்க ஒத்துப்பாங்களா?'' என, கேட்டார், காத்தவராயன்.

''நடிகர்கள் தான், கொள்கை, கிள்கைன்னு பேத்துவான்க… நடிகையருக்கு பேசினதுக்கு மேல, கூடுதலா பணம், 50 ஆயிரத்தில் பட்டு புடவை, ஒரு கிலோ நகை கொடுத்தா, உங்க தாத்தாவுக்கு ஜோடியாவும் நடிப்பாங்க!''

''உன் யோசனை, 'ஒர்க் – அவுட்' ஆகும் போல,'' என்றார், காத்தவராயன்.

''இசை அமைப்பாளரை விட்டு, 'ஜிமிக்கி கம்மல் ஸ்டைல்'ல, ஒரு, 'ஜிங்கிள்ஸ்' போட்டுடலாம்… பத்து வகை புல் சூட்ல, நொடிக்கு நொடி பாடிக்கிட்டே, 'டான்ஸ்' ஆடுறீங்க… கூட ஆடும் மூணு ஹீரோயினும், போட்டி போட்டு உங்களுக்கு முத்தம் தர்றாங்க… ஒவ்வொரு முத்தத்துக்கும், நம்ம கடை விற்பனை பகுதிகள் பூக்குது…

''முகம் முழுக்க, 'லிப்ஸ்டிக்'கோட நீங்க நாணி கோணி, 'சூப்பர் செல்லப்பாங்கி ஸ்டோர்சில் பொருட்கள் வாங்கினால், முத்தங்கள் மொத்தமா கிடைக்கும்'ன்னு, 'டயலாக்' சொல்றீங்க… விளம்பரம் முடியுது!''

''எனக்கு, 'டான்ஸ்' ஆட வராதே, அப்துல்!''

''பல வருஷமா, டான்சில், ஏ, பி, சி, டி





## ஆதிவாசிகளுக்காக இரங்கிய மருத்துவர்!

அமெரிக்காவில் அதிக சம்பளம் பெற்று, 'பிசியோதெரபிஸ்ட்' ஆக பணியாற்றியவர், இந்தியாவை சேர்ந்த, டாக்டர் தாமஸ் மேத்யூ. தாயகம் திரும்பியவர், மருத்துவ வசதியின்றி தவிக்கும், ஏலகிரி ஆதிவாசிகளின் நிலை அறிந்து வருத்தப்பட்டார். இதுபற்றி, புதுச்சேரி ஸ்ரீமணக்குள வினாயகா மருத்துவ கல்லூரி இயக்குனர், டாக்டர் ராஜகோவிந்தனிடம் சொன்ன போது, '53 வயதிலும் டாக்டர் பட்டம் பெற்று, சேவை செய்யலாம்…' என்றார்.

அமெரிக்காவில், உடன் பணியாற்றிய, 78 வயது பெண்மணி ஒருவர், டாக்டர் பட்டம் பெற்ற சம்பவம் பற்றி கேள்விப்பட்டார். 'பிசியோதெரபிஸ்ட்' வேலையை உதறி, இப்போது, எம்.பி.பி.எஸ்., டாக்டராகி, ஏழை, எளிய ஆதிவாசிகளுக்காக, சேவை செய்து வருகிறார், டாக்டர் தாமஸ் மேத்யூ.

— **ஜோல்னாபையன்.**



TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா



புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 14வது, முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழாவில் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி, ஆக. 23-

புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா நடந்தது.


புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 14வது முதலாம் ஆண்டு மாணவ, மாணவியர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. டீன் (அகாடமி) கார்த்திகேயன் வரவேற்றார். மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனருமான தனசேகரன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். கல்வி நிறுவன துணைத்தலைவர் சுகுமாறன் எம்எல்ஏ, கல்வி நிறுவன செயலாளர் நாராயணசாமி கேசவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தன் கலந்துகொண்டு பேசும்போது, கடந்த ஆண்டு மாணவர்கள் வாங்கிய தங்க பதக்க பட்டியல் பற்றியும் புதுச்சேரி பல்கலைகழகத்தில் மாணவர்களின் தரவரிசை குறித்தும் மாணவ, மாணவிகள் கல்லூரியில் நடந்துகொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றியும் பேசினார்.

விழாவில் துணை இயக்குனர் காக்னே, டீன் அமோல் டாங்கரே, மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை கண்காணிப்பாளர் கிரிஜா, மணக்குள விநாயகர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி முதல்வர் மலர்கண் மற்றும் மாணவ, மாணவிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

cations (P) Ltd, at Yogalatchumi Press, No. SPL A1 & G1, Industrial Estate, Thatt
1/6021 Phone: 0413- 4467676, 0413-4002199

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.




விழாவில் மாணவி ஒருவருக்கு ஜிப்மர் டீன் சாமிநாதன் பட்டம் வழங்கி கவுரவித்த போது எடுத்த படம்.

# மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி பட்டமளிப்பு விழா

புதுச்சேரி, பிப்.3–

புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது.

## பட்டமளிப்பு விழா

புதுவை ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 5–வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி இயக்குனர் ராஜ கோவிந்தன் வரவேற்றார். விழாவில் சிறப்பு விருந்தினராக புதுச்சேரி ஜிப்மர் டீன் சாமிநாதன் கலந்து கொண்டு 140 எம்.பி.பி.எஸ். மாணவ–மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி கவுரவித்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழக அளவில் இளநிலை மருத்துவத்தில் முதல் மாணவியாக திவ்யலட்சுமி 9 தங்க பதக்கம் பெற்று முதலிடமும், அபிஷேக் கே பிலிப் (வேதியியல்) முதலிடமும் பிடித்தனர். அதேபோல் பாக்கியலட்சுமி, சர்மி, சிபி ஸ்ரீ வத்சன் ஆகியோருக்கு கல்லூரியின் சார்பாக தங்க பதக்கங்களை வழங்கினார்.

## பங்கேற்றவர்கள்

விழாவில் ஸ்ரீ மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவரும், மேலாண் இயக்குனருமான தனசேகரன் சிறப்புரையாற்றினார்.

இதில் துணைதலைவர் சுகுமாறன், நிறுவன செயலாளர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குனர் காக்னே ராஜேந்திரகுமார், டீன்கள் கார்த்திகேயன், அமோல் டோங்ரே, மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ் மற்றும் மணக்குள விநாயகர் கல்வி குழுமத்தின் முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள், பெற்றோர் மற்றும் பலர் கலந்துகொண்டனர். முடிவில் டீன் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

TRUE COPY ATTESTED
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.



TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரியில் விளையாட்டு விழா

திருக்கனூர், பிப்.21– புதுவை கலிதீர்த்தாள் குப்பத்தில் உள்ள மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 13–வது ஆண்டு விளையாட்டு விழா நடந்தது. கல்வி நிறுவன தலைவரும், மேலாண் இயக்குனருமான தனசேகரன், துணைத் தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியருக்கு மருத்துவக் கல்லூரி இயக்குனர் டாக்டர் ராஜகோவிந்தன், டீன்கள் காக்னே, கார்த்திகேயன், அமோல் டாங்கரே, கண்காணிப்பாளர் பிரகாஷ் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள்.

சத்யம் எ

வித்தனர் என்றார்.

துள்ளனர்.

## மயக்கவியல் பயிலரங்கம்

**புதுச்சேரி, அக். 15–**

இந்திய மயக்கவியல் மருத்துவர்கள் கழகம், மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மயக்கவியல் துறை சார்பில் ஒரு நாள் பயிலரங்கம், இரண்டு நாள் கருத்தரங்கு நடந்தது.

சன்வே ஓட்டலில் நடந்த கருத்தரங்கிற்கு, இந்திய மயக்கவியல் மருத்துவர்கள் கழக புதுச்சேரி கிளை தலைவர் விஸ்வநாத், செயலர் பாலசுப்ரமணியன், துணை செயலர் சுரேஷ்குமார், பொருளாளர் திலீப்சந்தர் இணைந்து நடத்தினர்.

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், மணக்குள விநாயகர் கல்வி குழுமத்தின் தலைவர் தனசேகரன், மருத்துவ கல்லூரி துணை இயக்குநர் காக்னே, இந்திய மயக்கவியல் மருத்துவர்கள் கழக முன்னாள் தலைவர் ஹர்சூர் ஆகியோர் துவக்கி வைத்தனர். புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டில் இருந்து 200க்கும் மேற்பட்ட மூத்த மயக்கவியல் மருத்துவர்கள் மற்றும் மயக்கவியல் துறை முதுகலை பட்டப்படிப்பு மாணவர்கள் பங்கேற்று பயன் பெற்றனர்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.




■ இந்திய மயக்கவியல் மருத்துவர்கள் கழகம், மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மயக்கவியல் துறை சார்பில் நடந்த ஒரு நாள் பயிலரங்கில், புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், மணக்குள விநாயகர் கல்வி குழுமத்தின் தலைவர் தனசேகரன், மருத்துவ கல்லூரி துணை இயக்குநர் காக்னே; மயக்கவியல் மருத்துவர்கள் கழக முன்னாள் தலைவர் ஹர்சூர், மயக்கவியல் மருத்துவ கழகத்தின் புதுச்சேரி கிளையின் தலைவர் விஸ்வநாத், செயலாளர் பாலசுப்ரமணியன், துணை செயலாளர் சுரேஷ்குமார் விழா மலரை வெளியிட்டனர்.

# ஓவியப் போட்டியில் வென்ற மாணவருக்கு பாராட்டு



# EDUCATION HUB

## RALLY PROMOTING WORLD BREASTFEEDING WEEK



As part of World Breastfeeding Week, the Department of Pediatrics, Sri Manakula Vinayagar Medical College and Hospital along with Sri Manakula Vinayagar Nursing College and Indian Academy of Pediatrics, Villupuram-Puducherry Chapters organized a Breastfeeding Promotion Rally from SMVMCH to Madagadipet Round turn.

The rally was inaugurated by Mr. Ranganthan, Superintendent of Police, Puducherry West. Sri Manakula Vinayagar Educational Trust Chairman Mr. M. Dhanasekaran, Vice Chairman Mr.S.V.Sugumaran, Secretary K. Narayanasamy Kesavan, Director Dr. D. Rajagovindan, Dean Dr. R. N. Kagne., Dean Academic K.Karthikeyan, Medical Superintendent Dr. M. Pragash participated in the rally.

Medical College students, Post graduate students in the Department of Pediatrics, Prof. and Head of the Department of Pediatrics Dr. A.Arulkumaran, Professors M.Singaravelu, Dr.K.Kuppusamy, Dr.Bharathkumar.T, Associate, Assistant Professors of the Department of Pediatrics, Nursing College students, Nursing Principal Dr. Dansu and Assistant Professors of Pediatric Nursing along with 300 people participated in the rally.

The parade passed through important streets of Madagadipet handing out pamphlets containing benefits of Breastfeeding and the significance of early initiation. A health talk was given in Madagadipet Round turn on the importance of Breastfeeding and the theme for this year "Empower Parents enable Breastfeeding".

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

## புதுவையில் முதல் முறையாக

# புற்றுநோய் நோயாளிக்கு அவசர பைபாஸ் இருதய அறுவை சிகிச்சை


## மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி டாக்டர்கள் சாதனை

புதுச்சேரி, ஜூலை. 25-

புதுவையில் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பெருங்குடல் புற்றுநோயுள்ள ரங்கசாமி என்ற 73 வயது முதியவருக்கு அறுவை சிகிச்சை செய்ய முற்படும்போது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனே மயக்கவியல்மருத்துவர்கள் இசிஜி டெஸ்ட் செய்து பார்த்த போது இருதய மாரடைப்பு ஏற்பட்டதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை கண்டறிந்தனர். உடனே இருதய மருத்துவத்துறை தலைவர் திருமதி. டாக்டர் அனிதா அவை நோயாளியை ஆய்வு செய்யக்கேட்டனர்.

அவர் ஆய்வு செய்து அவசர கரோனோரி ஆஞ்சியோகிராம் செய்யுமாறு அறிவுறுத்திசெய்து முடித்தார். அதில் இதயத்திற்கு ரத்தம் கொடுக்கும் முக்கிய ரத்த நாளமான முழுவதும் 100 சதவீதம் அடைப்பு ஏற்பட்டதை உறுதி செய்தனர். உடனே இருதய அறுவை சிகிச்சை துறை தலைவர் டாக்டர் அருண்குமார் நோயாளியை பரிசோதித்து அவசர இருதய பைபாஸ் சிகிச்சை செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். அதனால் சிறிதும் தாமதம் ஆக்காமல் உடனே நோயாளியை அறுவை சிகிச்சை அறைக்கு அழைத்துச்சென்று மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சைக்கு தயார்படுத்தினர். இருதய அறுவை சிகிச்சை சிறப்பு மயக்கவியல்மருத்துவர் டாக்டர் கிருஷ்ணபிரபு மற்றும் டாக்டர் சீனிவாசன் ஆகியோர் நோயாளிக்கு மயக்க மருந்து கொடுத்து அறுவை சிகிச்சைக்கு தயார் படுத்தினர்.

அதன் பின்பு டாக்டர் அருண்குமார் தலைமையில்



டாக்டர் ரியாஸ், பாலாஜி, சதீஷ், நந்தினி, திருமதி. பிரியங்கா, செண்பகம் (செவிலியர்) மற்றும் உதவியாளர்கள் செந்தில், சரவணன் ஆகியோர் நோயாளிக்கு அவசர இருதய பைபாஸ் அறுவை சிகிச்சை இருதயத்தை நிறுத்தாமல் செய்து நோயாளியை வெற்றிகரமாக காப்பாற்றினார்.

அதன்பிறகு அவரை தீவிர சிகிச்சை பிரிவிற்கு மாற்றி 6 மணிநேரம் கழித்து செயற்கை சுவாசத்திலிருந்து வெளியே எடுத்தனர்.

அறுவை சிகிச்சை செய்த 8 மணிநேரத்திற்கு பின் நோயாளி உணவு உட்கொள்ள ஆரம்பித்தார். அவரை தொடர்ந்து 10 நாட்கள் அறுவை சிகிச்சைக்கு பிந்திய வார்டில் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் வைத்திருந்தனர். அதன்பின்னர் அவரை பரிசோதித்து வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அவர் 2-3 வாரத்திற்கு பிறகு மலக்குடல் புற்றுநோய்க்கான சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவார்.

இந்த சிகிச்சை முறை, முதலமைச்சரின் விரிவாக மருத்துவக் காப்பீட்டுவசதியின் மூலம் நோயாளிக்கு இலவசமாக செய்து முடிக்கப்பட்டது. தனியார் மருத்துவமனையில் இந்த சிகிச்சைக்கு ₹5-6 லட்சம் வரை செலவாகும் நிலையில், அவருக்கு இலவசமாக இந்த அறுவை சிகிச்சை செய்து புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவமனை சாதனை படைத்ததை அந்த மருத்துவமனையின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணைத்தலைவர் சுகுமாரன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி, கல்லூரியின் இயக்குனர் ராஜகோவிந்தன், துணை இயக்குனர் காக்னே, மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ் ஆகியோர் வெகுவாக பாராட்டு தெரிவித்தனர்.

புதுச்சேரியில் இவ்வகையான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல்முறையானது என்பது குறிப்பிடத்தக்கது.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

பெற்று விட்டனர். ஈரோடு அம்மாநில மக்களால்தான்



# புதுவை மணக்குளவிநாயகர் மருத்துவ கல்லூரியில் வளரிளம் பருவத்தினர் நலக்காப்பு வாரவிழா

புதுச்சேரி, நவ. 26-
புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை குழந்தைகள் நலத்துறை மற்றும் இந்திய குழந்தைகள் நலமருத்துவ சங்கம் விழுப்பும் புதுச்சேரி கிளை இணைந்து குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினர் நலக்காப்பு வார விழாவை ஒர் வாரம் வெகு விமர்சையாக கொண் டாடப்பட்டது.

விழாவையொட்டி முதல் நாளன்று மருத்துவக்கல்லூரி யில் வளரிளம் பருவத்தினர் எதிர்கொள்ளும் உடல் மற்றும் மனதளவு பிரச்சனைகள் குறித்தும் அதற்காக தீர்வுகள் குறித்தும் விழிப்புணர்வு கண்காட்சி மணக்குள விநாயகர் கல்வி நிறுவன செயலாளர் நாராயணசாமி கேசவன் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மருத்துவக் கல்லூரி இயக்குனர் ராஜ கோவிந்தன், டீன் ஆகாக்னே, டீன் கார்த்திகேயன், மருத் துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ், குழந்தைகள் நலத்தலைவர் அருள்குமரன் மற்றும் இந்திய குழந்தைகள் நல சங்கத்தின் தேசிய செயற் குழு உறுப்பினர் பேராசிரியர் சிங்காரவேலு, ஏனைய பேராசிரியர்கள், இணை மற்றும் துணை பேராசிரி யர்கள் பங்கு பெற்றனர்.

இதனைத்தொடர்ந்து சென்னையை சேர்ந்த பிரபல மனநல மருத்துவர் வெங்க டேஸ்வரனின் மருத்துவ மற்றும் செவிலியர் மாணவர் களிடம் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும் இவ்வருட மையக்கருத்தான "குடும்பம் நலமான வளரி ளம் பருவத்தினருக்கான ஏவுதளம்" என்பதனை வலி யுறுத்தி மருத்துவமனைக்கு வரும் பெற்றோர்களிடம் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

பெண் குழந்தைகளை போற்றும் விதமாக அவர்களின் ஊட்டசத்து மற்றும் பாதுகாப்பு குறித்து மகள்களின் தினம் சிறப்பாக கொண்டாப்பட்டது. குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு போட்டிகள் நடை பெற்று பரிசுகள் வழங்கப் பட்டன.

திருக்கனூர் போன் நேரு மேல்நிலைபள்ளியில் இளம் பருவ மாணவிகளிடம் மாத விடாய் பற்றிய சந்தேகங்கள் கேள்வி பதில் போட்டிகள் நடத்தப்பட்டன. மாணவர் களிடம் கைபேசியின் தீங்குகள் குறித்தும், மது போதை பழக்கத்தினால் வரும் பின் விளைவுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடல் நடைபெற்றது.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# மணக்குள விநாயகர் மருத்துவமனையில் கண்ணெலும்பை அரிக்கும் நோய்க்கு சிகிச்சை

**புதுச்சேரி, ஜன.1–**

மணக்குள விநாயகர் மருத்துவமனையில், பீட்ரஸ் கண்ணெலும்பை அரிக்கும் நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு, வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

மகதடிப்பட்டு கலிதீர்த்தாள்குப்பத்தில் உள்ள மணக்குள விநாயகர் மருத்துவமனையில் உள்ள காது, மூக்கு தொண்டை மருத்துவத்துறை புறநோயாளிகள் பிரிவிற்கு, காதில் கடுமையான வலியுடன் 17 வயது சிறுவன் வந்தார்.

டாக்டர் சந்தான கிருஷ்ணன் தலைமையிலான குழுவினர் அவரை பரிசோதித்தனர். அப்போது சிறுவனுக்கு பீட்ரஸ் கண்ணெலும்பினை அரிக்கும் அரிய வியாதி இருப்பது கண்டறியப்பட்டது. உடனடியாக சிறுவனுக்கு அறுவை சிகிச்சை செய்து, நோய் குணப்படுத்தப்பட்டது.

பேராசிரியர் சந்தானகிருஷ்ணன் கூறும்போது, 'காதில் சீழ்வடிதல் ஒரு முக்கிய பிரச்னையாக இந்தியாவில் உள்ளது. இதில் இரண்டு வகை உள்ளது. முதல் வகையில் அதிக சீழ்வடிதல் மற்றும் காது கேளாமை ஆகும். இரண்டாவது வகையில் சீழ் குறைவாகவும், ரத்தம் கலந்து துர்நாற்றத்துடன் இருக்கும். இந்த இரண்டாவது வகை அதிக பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. மூளைக் காய்ச்சல் உள்ளிட்ட விளைவுகளை உண்டாக்கும். இரண்டாவது வகை வியாதி எலும்பை அரிக்கும் தன்மை கொண்டது. இந்த வியாதி மிகவும் அரிதானது. இது பீட்ரஸ் கண்ணெலும்பை அரிக்கும் வியாதி' என்றார்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM
MADAGADIPET, PUDUCHERRY-605 107.



## விழுப்புரம் அருகே சிறுவானூர் கிராமத்தில்

# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி சார்பில் மருத்துவ முகாம்

புதுச்சேரி, மார்ச் 12-
புதுவை மணக்குள விநாயகர் மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரியின் சமூக மருத்துவத்துறையின் சார்பாக விழுப்புரம் மாவட்டம் சிறுவானூர் கிராமத்தில் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் பொதுமக்களுக்கு பொது மருத்துவம், உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற வியாதிகளுக்கு மருத்துவக்குழு பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கி இலவச மருந்துகளும் வழங்கப்பட்டது. மேலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் சமூகம் சார்ந்த நோய் காரணிகளுக்கு நலக்கல்வி வழங்கினர்.

விழாவில் 400-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சி சிறுவானூர் அரசுப் பள்ளி தலைமை யாசிரியர் முன்னிலை வகித்தார். சமூக மருத்துவத்துறை தலைமை பேராசிரியர் அமுல் ஆர் டாங்கரே, சமூக மருத்துவத்துறை பேராசிரியர் கலைச்செல்வன் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் சுகுணா, விநாயகமூர்த்தி, ராஜலட்சுமி, பிரவீன், சிந்தூரி, பாலபாஸ்கரன், பத்மாவதி, பூமதி, அருள்மொரி, ஜெனிபர், ரீனா, நான்சி, முருகன் மற்றும் கிராம தலைவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சமூக மருத்துவத்துறை சமூக சேவகர்கள் செய்திருந்தனர்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரியில் 171 பேருக்கு பட்டம்



புதுச்சேரி, செப். 13-
புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 6-வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரியின் இயக்குநர் டாக்டர். ராஜகோவிந்தன் வரவேற்புரை ஆற்றி மாண வர்களின் சாதனைகளை விளக்கினார். சிறப்பு விருந் தினராக டாக்டர் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகவேந்தர் அண்ணாமலை கலந்து கொண்டு மருத்துவக் கல்லூரியில் பயின்ற 134 இளநிலை மருத்துவ மாணவ - மாணவிகளுக்கு 37 முதுநிலை மாணவ. மாணவிகளுக்கு பட்டமளித்து கௌரவித்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழக அளவில் 2012-ம் கல்வியாண்டில் பயின்ற இள நிலை மருத்துவ மாணவ, மாணவிகளில் 10 தங்கப்பதக்கங்களும், 1 மாணவி முதலிடமும், முது நிலை மருத்துவ மாணவ- மாணவிகளில் 8 தங்க பதக்கங்களும் பெற்றுள்ளனர்.

புதுச்சேரி பல்கலைக்கழக அளவில் 2012-ம் ஆண்டு பயின்ற இளநிலை மருத்துவ மாணவ- மாணவிகளில் முதல் மாணவியாக வந்த நந்தினி . மேலும் மருந்தியல், பொது மருத்துவம் ஆகிய பிரிவுகளிலும் தங்க பதக்கம் பெற்றுள்ளார். முதலாமாண்டு இளநிலை மருத்துவத்தில் முதலிடம் பெற்றுள்ள கிஷோர் என்ற மாணவர் உயிர் வேதியியல் மற்றும் குழந்தை மருத்துவம் ஆகிய பிரிவுகளில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உடலியங்கியல் தேர்வில் சாந்தகுமார், நோயியல் தேர்வில் அக்சயா, நுண்ணியியல் தேர்வில் அனுபிரியா, காது மூக்கு, தொண்டை மருத்துவ தேர்வில் வினோதா ஆகிய மாணவ, மாணவிகள் தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர்.

புதுச்சேரி பல்கலைக் கழக அளவில் 2014-ம் ஆண்டு பயின்ற முதுநிலை மருத்துவ மாணவ- மாணவிகளில் மருந்தியல் தேர்வில் அன்ஷா, நோயியல் தேர்வில் கேட்டவ் ரோஹித் தேசாய், பொது மருத்துவ தேர்வில் சுரேஷ்பாபு, தோல் நோயியல் தேர்வில் நாக கீர்த்தனா, எலும்பு மூட்டு தேர்வில் பிரஜ்வால் கணேஷ், கண் மருத்துவ தேர்வில் விஸ்வநந்தா, மயக்கவியல் தேர்வில் நித்திஷ்முகுந்தன், கதிரியக்க சிகிச்சை தேர்வில் தல்லூரி பவிஷ்யா ஆகிய மாணவ, மாணவிகள் தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர்.

கல்லூரியின் சார்பாக இவர்களுக்கு தங்கப்பதக்கங் களை காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம் வேந்தர் டாக்டர் அண்ணாமலை, வழங்கினார்.

விழாவில் மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் தனசேகரன் சிறப் புரையாற்றினார். மணக்குள விநாயகர் கல்வி நிறுவன துணைத்தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., மணக்குள விநாயகர் கல்வி நிறுவன செயலாளர் மருத்துவர் நாராயணசாமி கேசவன், துணை இயக்குநர் மற்றும் டீன் டாக்டர். காக்னே ராஜேந்திரகுமார், டீன். (அகடாமிக் ) டாக்டர். கார்த்திகேயன், டீன் (ரிசர்ச்) அமோல் டோங்ரே மற்றும் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். பிரகாஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

விழாவில் மணக்குள விநாயகர் பொறியியல் கல்லூரி இயக்குநர் முனைவர் வெங்கடாஜலபதி, மணக்குள விநாயகர் தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் முனைவர் மலர்க்கண், மயிலம் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் செந்தில், மணக்குள விநாயகர் செவிலியர் கல்லூரி முதல்வர் முனைவர் தனுசு, மணக்குள விநாயகர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முனைவர் காஞ்சனா, வெங்கடேஸ்வரா கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் நளினி ராஜகோவிந்தன் மற்றும் மருத்துவர்கள், மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் பங்கேற்றனர்.

விழாவின் நிறைவில் டீன் (அகடாமிக்) டாக்டர் கார்த்தி கேயன் நன்றி கூறினார்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHAL KUPPAM
MADAGADIPET, PUDUCHERRY-605 107.



# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் தேசிய நூலக வாரவிழா

புதுச்சேரி, நவ. 17-

ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை நூலகத்துறை சார்பில் நவம்பர் 14, 2019 அன்று தேசிய நூலக வார தொடக்க விழா கொண்டாடப்பட்டது.

தேசிய நூலக வார தொடக்க விழா ஸ்ரீ மணக்குள விநாயகர் கல்வி அறக்கட்டளை தலைவர் தனசேகரன், துணைத்தலைவர் சுகுமாரன் எம். எல். ஏ., மற்றும் செயலாளர் டாக்டர் நாராயணசாமி ஆகியோரின் தலைமையில் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கடந்த கல்வி ஆண்டில் (2018-2019) நூலகத்தை அதிக நேரம் பயன்படுத்திய இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவ மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. பரிசை டாக்டர். ராஜகோவிந்தன் வழங்கி பாராட்டி பேசினார். விழாவில் டாக்டர் காக்னே (டீன்), டாக்டர் கார்த்திகேயன் (டீன் அகாடமிக்), டாக்டர் அமோல் டோங்க்ரே (டீன் ரிசர்ச்) மற்றும் டாக்டர் பிரகாஷ் (மருத்துவக் கண்காணிப்பாளர்) கலந்து கொண்டு உரையாற்றினர். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாட்டை நூலகத்துறை சார்பில் நூலகர் இளங்கோவன் மற்றும் நூலக ஊழியர்கள் செய்திருந்தனர்.

TRUE COPY ATTESTED


DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

## மணக்குள மருத்துவ கல்லூரியில்

# கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம் ஆரம்பம்

புதுச்சேரி, நவ. 20–

புதுவை ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம் நேற்று முதல் செயல்படுகிறது. மருத்துவர் விவேகானந்தன் இந்த மையத்தின் தலைமை அறுவை சிகிச்சை நிபுணராக பணியாற்றுகிறார்.




ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையத்தின் தலைமை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் விவேகானந்தன், நோயாளியை பரிசோதனை செய்தார்.

ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இருதய நோய் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், இருதய நெஞ்சக மற்றும் ரத்தநாள அறுவை கிசிச்சை மருத்துவம், குடல் இரைப்பை மற்றும் கல்லீரல் மருத்துவம், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவம், சிறுநீரகவியல் மருத்துவம், சிறுநீரக அறுவை சிகிச்சை மருத்துவம், மூளை மற்றும் தண்டுவட நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவம்போன்ற உயர் அறுவை சிகிச்சை பிரிவுகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. முன்னாள் ஜிப்மர் மருத்துவ கல்லூரி கண்காணிப்பாளர் மற்றும் மூத்த இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் பாலசந்தர் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி டீன் (உயர் மருத்துவ சிகிச்சை) ஆகபொறுப்பேற்று உள்ளார். அவரது மேற்பார்வையில் உயர் சிறப்பு துறைகள் மேலும் சிறப்பாக செயல்படுகிறது. மேலும் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வாரந்தோறும் நான்கு முதல் ஐந்து இருதய அறுவை சிகிச்சைகள் மற்றும் எட்டு முதல் பத்து ஆன்ஜியேபிளாஸ்டி சிகிச்சைகள் சிறந்த முறையில் நடைபெறுகிறது. மருத்துவர் பாலசந்தர் மணக்குள விநாயகர் நகர மையத்தில் (ரெட்டியார்பாளையம்) வாரந்தோறும் சனிக்கிழமை சிறப்பு மருத்துவ ஆலோசனை வழங்க உள்ளார்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.



# மலேசிய சர்வதேச மாநாட்டில் பங்கேற்ற மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி பேராசிரியர்

புதுச்சேரி, நவ.19-

புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவத் துறையின் மூத்த பேராசிரியர் டாக்டர் நீலகண்டன் விஸ்வநாதன் கடந்த 13-ந்தேதி முதல் 15-ந்தேதி வரை மலேசியாவில் நடந்த சர்வதேச மாநாட்டில் அழைப்பை ஏற்று கலந்து கொண்டார். அங்கு ரேபிஸ் மேலாண்மை, லேப்டோஸ் பிரோசிஸ், கால நிலை மாற்றங்கள் மற்றும் நோய்த் தொற்றுகள் ஆகிய 4 தலைப்புகளில் மாநாட்டில் சிறப்புரை ஆற்றினார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உலகெங்கிலும் இருந்து 2500 மருத்துவர்கள், கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கால்நடை மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார வல்லுநர்கள் அழைக்கப்பட்டனர். மலேசியா சர்வதேச மாநாட்டில் பங்கேற்று நாடு திரும்பிய மூத்த பேராசிரியர் டாக்டர் நீலகண்டன் விஸ்வநாதனுக்கு பாராட்டு விழா நடந்தது. மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் தனசேகரன், துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், மருத்துவ கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தன், டீன் காக்னே, கல்லூரி முதல்வர் மற்றும் ஊழியர்கள் பாராட்டுக்களை தெரிவித்தனர்.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

# மணக்குள விநாயகர் கல்லூரியில் தாய்ப்பால் வார நிறைவு விழா

புதுச்சேரி, ஆக.15–

மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை குழந்தைகள் நலத் துறைசார்பில் உலக தாய்ப்பால் நிறைவு விழா நடந்தது.




மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் நடந்த உலக தாய்ப்பால் நிறைவு விழாவில், மேலாண் இயக்குனர் தனசேகரன் பேசினார். அருகில் கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தன், டீன்கள் காக்னே, கார்த்திகேயன், மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ்.

மணக்குள விநாயகர் கல்வி நிறுவன மேலாண் இயக்குனர் தனசேகரன் தலைமை தாங்கி குத்து விளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தார். குழந்தை நலதுறை தலைவர் அருள்குமரன் வரவேற்றார். துணை தலைவர் சுகுமாறன், செயளர் நாராயணசாமி கேசவன், கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தன், மருத்துவ டீன் காக்னே, டீன் கார்த்திகேயன், மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ் ஆகியோர் பேசினர்.

செவிலியர் கல்லூரி முதல்வர் தனுசு, பேராசிரியர் சிங்காரவேலு, குப்புசாமி, பரத்குமார், பேராசிரியர்கள், செவிலியர் மாணவிகள் கலந்து கொண்டனர்.

புதுச்சேரியில் உள்ள அனைத்து மருத்துவ கல்லூரி இளநிலை, மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு வினாடி வினா, செவிலியர் மாணவர்களுக்கு பேச்சுபோட்டி, ஓவியம், ஆரோக்கிய குழந்தைகள் போட்டி நடத்தி, பரிசுகள் வழங்கப்பட்டன.

தாய்ப்பாலின் மகத்துவம் குறித்து தாய்மார்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு, கையேடுகள் வினியோகிக்கப்பட்டன. தாய்பால் பற்றிய முகாம் கோலியனூர் கிராமத்தில் நடந்தது. இதனை கோலியனூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் நந்தகோபால் தொடங்கி வைத்தார். தாய்பால் பற்றி 10 கேள்விகள் அடங்கிய கையேடுகள் 100 பெண்களுக்கு கொடுக்கப்பட்டு, சரியான விடை அளித்த தாய்மார்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

திருபுவனை ஆரம்ப சுகாதார நிலையத்திலும் விழிப்புணர்வு முகாம் நடந்தது. இந்திய குழந்தைகளின் நல சங்கம் தமிழ் நாடு கிளையின் தலைவர் சோமசேகர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

## மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரியில்

# உலக உடல் பருமன் நாள் விழா



புதுவை ஸ்ரீமணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடந்த உலக உடல் பருமன் நாள் விழாவில் மருத்துவக்கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தன், துணை இயக்குனர் காக்னே, மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ், பேராசிரியர் சிங்காரவேலு, குழந்தைகள் நலத்துறை தலைவர் அருள்குமரன் ஆகியோர் கையேடுகளை வெளியிட்டனர்.

புதுச்சேரி, அக். 14-

புதுச்சேரி கலிதீர்த்தாள்குப்பம் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் குழந்தைகள் நலத்துறை மற்றும் இந்திய குழந்தைகள் நல மருத்துவ சங்கம் விழுப்புரம் - புதுச்சேரி கிளை சார்பில் உலக உடல் பருமன் நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

இதனையொட்டி குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் பருமன் குறித்து விழிப்புணர்வு கண்காட்சியை மருத்துவக்கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தன் தொடங்கி வைத்தார். துணை இயக்குனர் காக்னே, டீன் (அகாடமி) கார்த்திகேயன். மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதனையொட்டி குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் பருமனுக்கான காரணங்கள் குறித்தும். அதனை தவிர்க்க பின்பற்ற வேண்டிய சத்தான உணவு பழக்கங்கள், மொபைல் மற்றும் ஒளித்திரை சாதனங்களால் ஏற்படும் பின்விளைவுகள், துரித உணவுகளால் ஏற்படும் உடல் உபாதைகள், குழந்தைகளுக்கு தேவையான உடற்பயிற்சிகள் ஆகியவை குறித்து இந்திய குழந்தைகள் நல சங்கத்தின் தேசிய செயற்குழு உறுப்பினர் பேராசிரியர் சிங்காரவேலு, குழந்தைகள் நலத்துறை தலைவர் அருள்குமரன் ஆகியோர் விரிவாக எடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சியில் குழந்தைகள் நலத்துறை பேராசிரியர்கள் குப்புசாமி, பரத்குமார் மற்றும் துணை பேரசிரியர்கள், முதுநிலை பட்டபடிப்பு மாணவர்கள், செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு உடல் பருமனை தவிர்க்கும் முறைகள் குறித்து கையேடுகள், சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107

## DISCUSSING IMPROVEMENTS IN MEDICINE



The 8th Annual Conference of the Pondicherry Orthopedic Association - 2019 was conducted at Sri Manakula Vinayagar Medical College and Hospital. It was attended by 140 delegates and faculty from various colleges of Puducherry and Tamil Nadu. The Organizing Chairman, Prof. Dr. A. Murugan welcomed all the dignitaries and delegates. The conference was inaugurated by Mr. M. Dhanasekeran, Chairman and Managing Director of Sri Manakula Vinayagar Group of Educational Institution, Vice Chairman Mr. S. V. Sugumaran M.L.A. and Secretary Mr. Narayanasamy Kesavan in the presence of Guest of Honor Dr. Atul Srivastava, Indian Orthopedic Association Secretary. Dr. Nalli Uvaraj OASIS Secretary, Medical College Director Prof. Dr. D. Rajagovindan, Dean Prof. Dr. R. N. Kagne, Prof. Dr. M. Pragash, Medical Superintendent SMVMCH Prof. Dr. R. Krishnagopal, POA President and Dr. C. J. Ravi POA Secretary.

The theme of this conference was "Complex Trauma and its Management". Prof. Dr. D. Rajagovidan emphasized upon the importance of conferences like these to update the knowledge among doctors in this fast-changing world. He stressed that a doctor should always be a student for life. The two-day scientific program included talks from eminent guest speakers from Tamil Nadu and Puducherry. The workshop was conducted with bone models on hip fractures. The quiz program was conducted by Dr. Kalyan Deepak. S and Dr. Arun Prasanth, Assistant Professors in department of Orthopedics SMVMCH.

## DISCUSSING AGRICULTURE AND HARVEST HANDLING



A national seminar on 'New Vistas in Post-harvest Technology and Value Addition of Farm Products in Enhancing Rural Livelihood' was conducted at Adhiparasakthi Agricultural College, Kalavai recently. The main aim of the seminar was to enhance the food and nutritional security of India by managing agricultural produce.

This seminar also highlighted subjects like post-harvest technology, value addition of food products and quality addition of harvested produces. Many scientists of Tamil Nadu and neighbouring states participated and discussed harvest handling. Around 15-20% of the food produce is lost due to the problems during post- harvest handling like improper storage, pest infestation, quality deterioration and wastage during transit process, which is unfortunate.

The meeting was inaugurated by Dr. S. Manickam, Dean of Adhiparasakthi Agricultural College. The Chief Guests Dr. V. Rajendran, Dean, Agricultural Engineering College and Research Institute, Trichy and Dr. M. Kannnan, Dean, Adhiparasakthi Horticultural College delivered the special address. Dr. N. Venkatachalapathy from Indian Institute of Food Processing Technology, Tanjore, Dr. J. Prakash Maran of Periyar University, Salem and Dr. Pradhap Kumar Shetty of Pondicherry University participated as keynote speakers. Around 40 papers were presented, and salient recommendations delivered. In total, 50 participants from several institutes of different states attended the seminar.

## COMING OUT IN FLYING COLOURS



The 12th Graduation day of Sri Manakula Vinayagar Engineering College was held in the college premises on the 5th January 2019. The 1,996 Graduates of 2015 and 2016 batches were awarded Degrees by the Chief Guest and other dignitaries. In total, 18 gold medalists and 175 'top 10' rank holders were honored with 38 sovereigns of gold chains and Rs. 4 lakh cash awards. The Director and Principal Dr. V.S.K. Venkatachalapathy welcomed the gathering and read the Annual Report.

Shri. M. Dhanasekaran, Chairman and Managing Director presided over the function and delivered the presidential address. Shri. Krish Ganesan, Global Head - Talent Acquisition, TCS was the Chief Guest and he delivered the graduation day address. Dr. Murali Padmanaban, Senior Vice President, Global Head, Talent Development, Virtusa, was the Guest of Honor and delivered the special guest address.

Shri. S. V. Sugumaran Vice Chairman, SMVE Trust Dr. Narayanasamy Kesavan, Secretary, SMVE Trust, Dr. R. Rajagovindan, Medical Director, Dr. S. Senthil, Principal Mailam Engineering college, Dr. S. Malarkkan, Principal, Manakular Institute of Technology were present in the occasion.Dr. S. Jayakumar, Head, Department of Civil engineering proposed the vote of thanks.

## AN AWARENESS PROGRAMME DISCOURAGING PLASTIC




A two-day awareness programme on 'Say no to Plastics! Use biodegradable bags to save earth' was conducted in IFET College of Engineering, Villupuram. The event was sponsored by TNSCST, Chennai. The first day of this program had school students as attendees. More than 400 students actively participated and gained knowledge about how the disadvantages of plastic bags and the need to go biodegradable.

The second day of this programme was conducted for the public. A drama and other cultural programmes were organised. The use of biodegradable bags was insisted through this programme. Mr.K.V. Raja, Chairman, Mr.A.Mohamed Ilyas, Vice Chairman, Mr. K. Shivaram Alva, Secretary, Dr. G. Mahendran, Principal, Dr. S. Matilda, Vice Principal and Dean Academics, Prof. J. Asha, Dean Placement were present at the event. Dr. S. Balamurugan and Dr. P. Pughazhendiran organized the event.

## SECURING INTERNATIONAL RANKS IN OLYMPIADS



Orange Educational Institutions run "Orange British Academy" which follows IGCSE and CBSE (International Curriculum, Edexcel - UK) Syllabus and Orange International Matric Hr. Sec. School" which follows Matric Syllabus. About 300 students from both the schools appeared in different Olympiad examinations like English, Maths, Science and Computer Science and achieved International Ranks and Gold, Silver and Bronze Medals in all the subjects.

The IGCSE and CBSE Grade 1 and 2 students - Agasthika Vaishiya, Nithish, Kabilan, Sathana amd Srimithran placed an International First Rank, Akilesh, Harisanth, Tharun Raj and Raja Sri placed International Second Rank and Harish and Sathana placed International Third Rank. Adding to this, the IGCSE and CBSE students have secured 67 gold medals, 66 students have secured Silver medals and 39 students have secured bronze medals in Maths, Science, English and Computer Science subjects. Orange International Matric. Hr. Sec. School students around 35 got gold medals, 21 students got silver medals and 10 students got bronze medals.

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.




தென்னிந்திய அளவிலான

# எலும்பு முறிவு மருத்துவர்கள் சங்க மாநாடு

## போலீஸ் டி.ஜி.பி. தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, ஆக.24-
எலும்பு முறிவு மருத்துவர்கள் சங்கத்தின் தென்னிந்திய அளவிலான 18-வது மாநாடு புதுச்சேரி எஸ்.வி. பட்டேல் சாலையில் உள்ள ஆனந்தா இன் ஓட்டலில் நேற்று மாலை தொடங்கியது. இதன் தொடக்க விழாவுக்கு போலீஸ் டி.ஜி.பி. பாலாஜி ஸ்ரீவஸ்தவா தலைமை தாங்கி மாநாட்டை தொடங்கி வைத்து மாநாட்டு மலரை வெளியிட்டார். விழாவில் மாநாட்டின் ஒருங்கிணைப்பு சேர்மன் டாக்டர் பாண்டியன், புதுவை மாநில டாக்டர்கள் சங்க தலைவர் கிருஷ்ணகோபால், மாநாட்டு செயலாளர் பிரகாஷ், துணை தலைவர் வீரப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் தமிழகம், புதுச்சேரி உள்பட 6 மாநிலங்களை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட டாக்டர்கள் கலந்து கொண்டனர். இதில் எலும்பு முறிவு சிகிச்சை, மூட்டு மற்றும் முதுகு தண்டுவட பிரச்சினைகள் குறித்தும், அதற்கு மேற்கொள்ள வேண்டிய நவீன சிகிச்சை முறைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட உள்ளது. இந்த மாநாடு இன்றும் (சனிக்கிழமை), நாளையும் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது.

TRUE COPY ATTESTED
DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHAL KUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

குலாம் தஸ்தகீர் விளக்கு | சமூக அறிவியல் புலமுதல் | கூறினார்.



# மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரிக்கு சிட்கர் தரச்சான்றிதழ்

புதுச்சேரி, பிப்.27– ஆசிய மற்றும் மேற்கு பசிபிக் நெறிமுறை குழுக்களின் மதிப்பாய்வு அமைப்பின் (பெர்கேப்) 18–வது சர்வதேச வருடாந்திர கருத்தரங்கு தைவான் நாட்டில் நடை பெற்றது. இந்த கருத்தரங்கில் மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவ மனைக்கு சிட்கர் தரச்சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கப் படுவதாக அறிவிக்கப்பட்டது. அவற்றை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரிக்கு வழங்கும் நிகழ்ச்சி புதுவை சன்வே ஓட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பெர்சி அமைப்பின் தலைவர் மற்றும் ஐ.சி.எம்.ஆர். முன்னாள் துணை இயக்குனருமான டாக்டர் வசந்தா முத்துசுவாமி கலந்து கொண்டு மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி இயக்குனர் ராஜகோவிந்தனிடம் தரச்சான்றிதழ், கேடயத்தை வழங்கினார். மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவரும் மேலாண் இயக்குனருமான தனசேகரன், துணைத்தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., செயலாளர் நாராயணசாமி கேசவன், டீன் மற்றும் நெறிமுறை குழுவின் உறுப்பினர் செயலாளர் ஆர்.என்.காக்னே, டீன் (ஆராய்ச்சி) டாக்டர் அமோல் டாங்கரே மற்றும் நெறிமுறை குழுவின் தலைவர் தியாகராஜன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்த சர்வதேச தரச் சான்றிதழை பெற்றிருப்பதன் மூலம் இந்த மருத்துவக்கல்லூரியில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நெறிமுறைகள் சர்வதேச அளவிலான அங்கீகாரத்தை பெற்றுள்ளதாக கல்லூரியின் நிர்வாகத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## மண்ணாடிபட்டு தொகுதியில்

# ரூ.13 லட்சம் செலவில் சாலை அமைக்கும் பணி

## டி.பி.ஆர். செல்வம் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

TRUE COPY ATTESTED

DEAN
SRI MANAKULA VINAYAGAR
MEDICAL COLLEGE & HOSPITAL
KALITHEERTHALKUPPAM,
MADAGADIPET, PUDUCHERRY-605 107.

நமதுமுரசு புதுச்சேரி 15.9.2019



# புதுவை மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரியில் தற்கொலை தடுப்பு நாள் அனுசரிப்பு

புதுச்சேரி, செப். 15-
புதுவை மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மன நலத் துறை சார்பாக உலக தற் கொலை தவிர்ப்புநாள் அனுசரிக்கப்பட்டது.

மனநோய் தலைமை மருத்துவர் பேராசிரி யர் குமார் வரவேற்புரை ஆற்றினார். மணக்குள விநாயகர் கல்வி நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் தன சேகரன், மணக்குள விநாயகர் கல்வி நிறுவன துணை தலைவர் சுகுமாறன் எம்.எல்.ஏ., மணக்குள விநாயகர் கல்வி நிறுவன செயலாளர் மருத்துவர் நாராயணசாமி கேசவன், இயக்குநர் ராஜகோவிந்தன், துணை இயக்குநர் மற்றும் டீன் டாக்டர் காக்னே, டீன் (அகாடமி) டாக்டர் கார்த்தி கேயன், டீன் (ரிசர்ச்) அமோல் டோங்ரே மற்றும் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் பிரகாஷ், துணை மருத்துவ கண்காணிப்பாளர்கள் கிரிஜா, ஜெயஸ்ரீ, மணக்குள விநாயகர் செவிலியர் கல்லூரி முதல்வர் தனுசு, மணக்குள விநாயகர் பாலி டெக்னிக்கல்லூரி பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர்.

